# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், எதெல்பெர்கா, வில்சன் மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, டோன்போஸ்கோ மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஜோஸ்பின் ராஜேஸ்வரி ஸ்டெல்லா ரோஸ், மிரியம்-திண்டுக்கல், ஜீலி எலிசபெத், மேரி மௌரிஸ்- தஞ்சாவூர், மார்சலோசா மேரி, லோரா மேரி, லாசரிற்றா மேரி - தூத்துக்குடி, புஷ்பா மேரி - காரைக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, றோஸ்லினா - சிவகங்கை, குழந்தைதெரஸ் - சேலம்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், ஞானசேகரன், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா,ஜோஸ்பின் மேரி திண்டுக்கல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மைக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ் - சென்னை, மரிய பிரகாசம் - தர்மபுரி

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. மேரி செசாரியா - சென்னை
அருட்சகோதரி. ஜோஸ்பின் ராஜேஸ்வரி-- திண்டுக்கல்
திருமதி. செலின் மேரி - திருச்சி
திருமதி ரீனா அந்தோணிராஜ் - சென்னை

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.








# கடவுளின் மொழி

## பதிப்பாசிரியர் பக்கம்


ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

முத்துக்கள் நூலினால் கோர்க்கப்பட்டு உருவாகும் ஜெபமாலை அன்னை மரியாளின் பக்தியினை இன்று உலகெல்லாம் பரப்பி இருக்கின்றது. இந்த ஜெபமாலை அன்னை மரியாளுக்கு மட்டும் நாம் சமர்ப்பிக்கும் பக்தி மாலையா என்றால் இல்லை; அதோடு சேர்த்து நம் ஆண்டவர் இயேசுவுக்கும் சமர்ப்பிக்கும் நினைவு மாலை.

இந்த ஜெபமாலை என்பது உலகு சார்ந்த பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஒரு சாதாரணப் பொருள். அதனால் அதெப்படி இறைவனோடு நம்மை இணைக்கும் என்ற கேள்வி எழலாம். கடவுள் தன்னை பல வழிகளில் வெளிப்படுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம், தந்தைக் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு தன்னை பகலில் மேகத் தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் வெளிப்படுத்தினார். மோசேக்கு தன்னை வெளிப்படுத்தும்போது எரியும் புதராக அவரிடம் பேசினார். எலியா இறைவாக்கினருக்கு மெல்லிய தென்றல் காற்று மூலமாக வெளிப்படுத்தினார். இவை அனைத்தும் இயற்கை சார்ந்தவை அப்படியென்றால் மண்ணுலகு சார்ந்தவை. விண்ணைச் சார்ந்த கடவுள் ஏன் மண்ணைச் சார்ந்த இயற்கை மூலம் தன்னை வெளிப்படுத்த வேண்டும்? காரணம், மண்ணைச் சார்ந்த



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
செபிக்கும் மரியா I - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
செபமாலை கயிறு - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மரியா - கடவுளின் கடிதம் - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
மௌன மொழி - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

மனிதர்களோடு கடவுள் உரையாட மண்ணைச் சார்ந்த இயற்கைதான் தேவைப்படுகிறது. அதனால்தான் மண்ணைச் சார்ந்த மனிதர்களோடு வாழ்வதற்கு தன்னுடைய ஒரே மகனை ஒரு மனிதனாக இந்த மண்ணிற்கு அனுப்புகின்றார். கடவுள் நினைத்திருந்தால் தன்னுடைய மகனை விண்ணைச் சார்ந்த கடவுளாக இந்த மண்ணிற்கு அனுப்பியிருக்கலாம். அப்படி அனுப்பியிருந்தால் அவரால் மக்களோடு மக்களாக பழகியிருக்க முடியுமா? இல்லை மக்களால்தான் அவரை தங்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டிருக்க முடியுமா?

மனிதர்களோடு உரையாட விரும்பும் கடவுள் தன்னுடைய கடவுள் மொழியில் பேசினால் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியாது. கடவுள் பேசுவது மனிதருக்கு புரியவேண்டுமென்றால் அவர் மனித மொழியில் பேச வேண்டும். விண்ணுலகு சார்ந்தவை அனைத்தும் ஒரு மறைபொருளாக இருக்கின்றது. மண்ணுலகு சார்ந்த ஒன்றுதான் மனிதர்களுக்கு ஓரளவாவது புரியும். அதனால் கடவுள் மண்ணுலகு சார்ந்த பொருட்கள் மூலம் பேசுகின்றார்.

இதுவரை கடவுள் பேசுவதைப் பற்றிப் பார்த்தோம். இனிமேல் மனிதர்கள் கடவுளிடம் பேசுவதைப் பற்றிப் பார்ப்போம். கடவுள் மனிதர்களிடம் பேச வேண்டுமென்றால் மனித மொழியில் பேச வேண்டும். அதே நேரம் மனிதர்கள் கடவுளிடம் பேச வேண்டுமென்றால் கடவுள் மொழியில்தான் பேச வேண்டுமென்றால் அது முடியாது. காரணம் மனிதர்களுக்கு கடவுளின் மொழி தெரியாது. ஆகவே, மனிதர்கள் கடவுளிடம் மனித மொழியில்தான் பேச வேண்டும். கடவுள் மனித மொழியினை புரிந்து கொள்வாரா என்றால் நிச்சயமாக புரிந்து கொள்வார். காரணம் தன் மகன் மூலமாக கடவுள் மனிதர்களின் மொழியினை நன்கு புரிந்து வைத்துள்ளார்.

கடவுளிடம் உரையாடுவதற்கு எத்தனையோ மனித மொழிகள் இருக்கின்றன. அதில் ஒரு மனித மொழிதான் ஜெபமாலை. இந்த ஜெபமாலை அன்னை மரியாளின் புகழை மட்டும் பாடும் ஒரு புகழ் மாலை அல்ல. அது ஆண்டவர் இயேசுவின் மறையுண்மைகளை தியானிக்கும் ஒரு அருள் மாலை. இந்த ஜெபமாலை யாருடைய மொழி தெரியுமா? சாதாரண படிப்பறிவில்லாத பாமர மக்களின் மொழி. யாருக்கெல்லாம் ஜெபங்களைப் படிக்கத் தெரியாதோ அவர்கள்தான் ஜெபமாலை மூலமாக கடவுளிடம் ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

அன்று சாதாரண மக்களின் மொழியாக இருந்தது இன்று சரித்திரம் படைக்கும் மொழியாக மாறியிருக்கின்றது. யாரெல்லாம் இந்த ஜெபமாலை மொழியினை பயன்படுத்துகின்றார்களோ அவர்கள் கடவுளிடமிருந்து அபரிவிதமான பலன்களால் பயன்பெறுகின்றார்கள். இந்த ஜெபமாலை மொழி ஒவ்வொரு குடும்பத்தின் குடும்ப மொழியாக மாற வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த மொழியினைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு முதலில் பெற்றோருக்கு இந்த மொழி தெரிந்திருக்க வேண்டும். ஜெபமாலை மொழியின் முத்துக்கள் நூலினால் கோர்க்கப்பட்டிருப்பதுபோல நம்முடைய குடும்பங்களும் உறவு என்ற நூலினால் கோர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

**தாய் மொழியினை நேசிப்போம்**

**ஜெபமாலை மொழியினை சுவாசிப்போம்**





**மரியசிலுவை – காளையார்கோவில்**


என் கணவர் ஈஸ்டர் அன்று எங்களுக்கு புதுதுணிகள் எடுப்பதற்காக செல்லும்போது அவருக்கு விபத்து நடந்தது. மாதாவிடம் ஜெபித்து மாதா எண்ணெய் தடவினேன். அவருக்கு சுகம் கிடைத்தது. மேலும் எனக்கு மூன்று பெண் குழந்தைகள். என் மகளுக்கு 2 பெண் குழந்தைகள். அதனால் மூன்றாவதாக ஆண் குழந்தை வேண்டும் என்று ஜெபித்தேன். ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கஸ்தூரி – கண்ணகிநகர்**

எனக்கு எல்லா தேவலயங்களுக்கும் திருப்பயணமாக போகின்ற வழக்கம் இருந்தது. ஆனால் வேளாங்கன்னிக்கு போக முடியாமல் பணம் தடையாக இருந்தது. ஜீவமாதாவிடம் விண்ணப்பித்தேன் அதேபோன்று மாதாவின் அருளால் பணத்தடை நீங்கியது. மகிழ்ச்சியோடு வேளாங்கன்னிக்குப் போனேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மினி – கன்னியாகுமரி**

எனக்கு திருமணமாகி 6 வருடங்கள் ஆகியும் மழலை வரம் இல்லை. என் அக்கா அவர்களுக்கும் குழந்தை இல்லை. ஜீவமாதாவிடம் அழுது ஜெபித்தேன். மாதாவின் அருளால் அக்காவிற்கு முதலில் குழந்தை வரம் கிடைத்தது. அதன்பின் எனக்கும் மழலை வரம் கிடைத்தது. எங்கள் இரண்டு பேரையும் மழலை செல்வத்தால் ஆசீர்வதித்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



## ஒக்கியம்பேட்டை ஜோதி மாதா ஆலயத்தின் சாட்சி

**ரீனா அந்தோணிராஜ் - ஒக்கியம்பேட்டை**

என் இரண்டாவது மகன் வயிற்றில் இருக்கும்போது எட்டு மாதத்தில் வலி ஏற்பட்டது. மருத்துவர்கள் குழந்தையின் எடை குறைவாக இருக்கிறது அதனால் பிரசவத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்று கூறி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் ஜீவமாதாவிடம் தாயே நான் இருக்கும் இந்த இடத்திற்கு வாங்க. நான் குழந்தையை நல்லமுறையில் பெற்றெடுத்து உமக்கு சாட்சி சொல்ல வேண்டும் அம்மா என்று வேண்டினேன். ஜீவமாதா அருளால் நல்ல முறையில் குழந்தையைப் பெற்றெடுத்தேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மேரி – சோழிங்கநல்லூர்**

என் மகனுக்கு திருமணம் முடிந்து 13 வருடங்கள் கடந்தும் குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருந்தது. நான் ஜீவமாதாவிடம் மனமுருக மன்றாடினேன். குழந்தை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பெயர் சொல்ல விரும்பாதவர்**

என் அத்தை மகனுக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் மழலை வரம் இல்லை. நான் மாதாவிடம் ஜெபித்தேன். அதேபோல் குழந்தை வரமும் வீடும் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மரியா ஆல்பர்ட்**

எனக்கு திருமணமாகி 12 வருடங்கள் கடந்தும் குழந்தை இல்லை. நான் மாதாவிடம் தொடர்ச்சியாக வந்து ஜெபிக்க முடியவில்லை ஆனாலும் எனக்கு மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**எஸ்தர் - சோழிங்கநல்லூர்**

எனக்கு கால்வலி 3 மாத காலமாக இருந்தது. வெரிகோஸ் வியாதியினால் காலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் அதற்கு 1.50 லட்சம் செலவு ஆகும் என்றும் மருத்துவர்கள் கூறினார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. மாதாவிடம் மன்றாடினேன். அம்மா என்னை இந்த வெரிகோஸ் வியாதியில் இருந்து சுகம் கொடுங்கள் மேலும் அறுவை சிகிச்சை இருக்கக்கூடாது என்றும் மாதாவிடம் மன்றாடினேன். மாதாவின் அருளால் நான் நலமடைந்தேன் என்று நன்றியோடு கூறுகிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**நம்பிக்கை அன்னை**

ஓர் ஊரில் கடும் வறட்சி ஏற்பட்டது, நெடுநாளாக மழை பெய்யவில்லை ஆகவே விவசாயம் நடைபெறாமல் இருந்தது. அது ஒரு கிறிஸ்தவ கிராமம் ஆகவே பங்குத்தந்தை மழைக்காக வேண்டி செபிக்க ஒரு தியானம் ஏற்பாடு செய்தார். கிராம மக்கள் அனைவரும் வந்தனர். தியானத்தின் இறுதிநாளில் நீண்டநேரம் இடைவிடாமல் அனைவரும் செபித்தனர். செபம் முடிந்ததும் மழை நன்கு கொட்டியது. பலரும் வீடுதிரும்ப முடியாமல் ஆலயத்திலே தங்கினர். ஒரு வயதான பாட்டி மட்டும் கையில் வைத்திருந்த குடையை விரித்து புறப்பட்டார். அப்போது பங்குத்தந்தை கூறினார், "என் அழைப்பை ஏற்று தியானத்திற்கு வந்தவர்களுள் அவர் மட்டுமே மழை பெய்யும் என்னும் நம்பிக்கையோடு குடை கொண்டு வந்துள்ளார்; அவரது நம்பிக்கையால்தான் இன்று மழை பெய்கிறது." என்றார்.

எசாயா 40:31, "ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள் போல் இறக்கை விரித்து உயரே செல்வர்; அவர்கள் ஓடுவர்; களைப்படையார்; நடந்து செல்வர்; சோர்வடையார்." இறைநம்பிக்கை நம் வாழ்வில் மாபெரும் மாற்றங்களை நிகழ்த்துகிறது. விவிலியத்தின் அடிப்படையில் நாம் ஆபிரகாமை 'நம்பிக்கையின் தந்தை' என அழைக்கின்றோம். அன்னை மரியாளை 'நம்பிக்கையின் தாய்' என்று அழைக்கின்றோம்.

வானதூதர் மரியாவுக்கு தோன்றியபோது "இதோ கருவுற்று ஒருமகனைப் பெறுவர்" (லூக் 1:31) என்றார். மரியாவோ, "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே" என்று தனது ஐயப்பாட்டை வெளிப்படுத்தினார். தூய ஆவி உம்மீது வரும்... என்று வானதூதர் கூறிய விளக்கம் மரியாவின் அறிவுக்கு எட்டாததாகவும், இயற்கைக்கு முரணானதாகவும் இருந்தபோதிலும் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்ற கூற்றை தனது வாழ்வின் மையமாகக் கொண்டு நம்பி கீழ்ப்படிந்து "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று தனது நம்பிக்கையை அறிக்கையிடுகின்றார். இறைவன் மீது கொண்ட நம்பிக்கையாலே மரியா பேறுபெற்றவராகத் திகழ்கிறார். நமது நம்பிக்கை, நம் அன்னையின் நம்பிக்கைபோன்று உயிராற்றல் உள்ளதாக இருக்க வேண்டும். நமது இறைநம்பிக்கை நம் அனைத்துச் செயல்களிலும் கூடியதாக இருக்க வேண்டும். அன்னையின் நம்பிக்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டு நம்பிக்கையின் ஒளியாய் வாழ்வோம், வாழ்வடைவோம்.

# செபிக்கும் மரியா I

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**முன்னுரை**

கிறிஸ்தவர்களின் வாழ்வில் செபம் இன்றியமையாத ஒரு பகுதியாக இருக்கின்றது. நம்புங்கள் செபியுங்கள் நல்லது நடக்கும் என்று நம் வாழ்வின் அனுபவம் நமக்குச் சொல்கிறது. பவுலடியாரும் எப்போது மகிழ்ந்திருங்கள் என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள் என்று கூறுகிறார். அக்டோபர் மாதம் செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதத்தில் நாம் அடிக்கடி செபமாலை செபித்து, மரியாவோடு, இயேசுவை நெருங்கிப் பின்செல்ல அழைக்கப்படுகிறோம். இம்மாதத்தில் இரு விழாக்களை நினைவு கூறுகின்றோம். ஒன்று செபமாலை அன்னை விழா. இரண்டு, தூய பாத்திமா அன்னை விழா. செபமாலை செபித்ததனால் திருஅவை எதிரிகளிடமிருந்து பெற்ற வெற்றியை நினைப்பூட்டி தொடர்ந்து தனியாகவும் குடும்பமாகவும் குழுமமாகவும் வாடா மாலையை செபித்து அன்னைக்குச் சூட அக்டோபர் 7 ஆம் நாள் அழைக்கின்றது. மூன்று குழந்தைகளுக்குத் தொடர்ந்து காட்சி அருளிய நம் அன்னை மரியாவின் இறுதிக்காட்சியினை, இம்மாதம் 13 ஆம் நாள் நினைவு கூறுகிறோம். 1917 ஆம் ஆண்டு, மே மாதம் 13 ஆம் நாள் முதல், அன்னை மரியா பாத்திமா நகரில் தோன்றிய போதெல்லாம் செபிக்க, செபமாலை சொல்லக் கேட்டுக் கொண்டார். உலகில் அமைதி நிலவ ஒரே வழி செபமாலை என்ற ஆயுதமே என்பதை நமது அன்னை பெரிதும் வலியுறுத்தினார். ஆயுதங்கள் ஏந்திப் போர்களிலும், வன்முறையிலும் ஈடுபடும் நாடுகளின் அதிகார, ஆணவப் போக்கை முறியடிக்க, நாம் நமது கரங்களில் செபமாலை என்ற சிறிய கருவியை, ஆனால் சக்தி வாய்ந்த கருவியை எடுக்க வேண்டும். அதனை அன்றாடம் செபிப்பதன் பயனாக உலகில், குடும்பங்களில் அமைதியை, மகிழ்வைக் கொண்டுவர முடியும் என்பதை நமது அன்னை பல இடங்களில் காட்சிகள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். அவரும் ஒரு செபிக்கும் அன்னையாகவும் காட்சி தருகின்றார். இக்கட்டுரையில் செபிக்கும் மரியாவைப் பற்றிய சிந்தனைத் துளிகளை நமதாக்குவோம்.

**செபிக்கும் இயேசு**

இயேசுவை செபிக்கும் மனிதராக உருவாக்கியதில் அவர்தம் பெற்றோர் தங்கள் பங்களிப்பை அளித்தனர். ஏனெனில் இயேசு வளர வளர அறிவிலும், ஞானத்திலும் உயர்ந்து இறைவனுக்கும் மனிதருக்கும் பிரியமானவராய் இருந்தார் என நற்செய்தி கூறுகிறது. இயேசுவின் வாழ்வில் செபமும் பணிகளும் இணைந்து சென்றன. அதிகாலையில் செபித்தார். இரவெல்லாம் தன் தந்தையோடு இணைந்திருந்தார். தனது





## இந்திய மண்ணில் மரியின் ஊழியர்கள் பொன்விழா - செபம்

அன்புத் தந்தையே இறைவா,
நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்வாக்கி உலகிற்கு ஒளியாகவும்,
பாரம்பரியம் மிகுந்த இந்திய மண்ணில்
ஐம்பது ஆண்டுகள் மரியின் வழியில்
நம்பிக்கையை விதைக்கும் ஊழியர்களாகவும்
வாழ அழைத்தமைக்கு உமக்கும், எம் வியாகுல அன்னைக்கும்
எங்கள் நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

எங்கள் முயற்சிகளிலும், பணிவாழ்வின் கடினமான சூழல்களிலும்
எமக்கு உற்சாகமும், ஆதரவும் தந்து எம்முடன் பயணித்த,
இன்றும் பயணிக்கின்ற அனைவருக்கும் நிறையாசீர் அளித்தருளும்.

எம் அர்ப்பண வாழ்வில், நாங்கள் அனைவரும்
அன்பு, அமைதி, நீதி, பகிர்வு, மன்னிப்பு ஆகியவற்றிற்கு
முன்மாதிரிகளாகத் திகழ்ந்து
துன்புறுவோர் அனைவரும் ஆறுதலும் நற்சுகமும் பெற்றிட
நம்பிக்கையை ஏற்படுத்தும் ஊழியர்களாக வாழ்ந்து
பணிசெய்து மகிழ்ந்திட உம் ஆவியால் வழிநடத்துவீராக.

இளைஞர்கள், படைப்பின் மேன்மையை உணர்ந்து,
தங்கள் வாழ்வை உமக்கு அர்ப்பணித்து,
மரியின் ஊழியர் சபையில் பணிபுரிந்திட ஊக்கமளித்தருளும்.

எமது வாழ்வும் பணியும்
நீர் தரும் முடிவில்லா அமைதியை
எதிர்நோக்கி இருக்கச்செய்தருளும்.
எமக்கு முன்னும், எம்மோடும்,
ஊழியர் சபையில் பயணித்து, பணிபுரிந்து
இறந்த உம் அடியார்கள் விண்ணக உறைவிடத்தில்
நிலையான இளைப்பாறுதல் அடைவார்களாக.

வியாகுல அன்னை, தம் திருமகன் கிறிஸ்துவோடு,
எமது ஐக்கிய அன்னை இந்திய மாநில குழுமங்களையும்,
உலகலாவிய மரியின் ஊழியர் சபையையும் எப்போதும்
புதிய நம்பிக்கையை விதைத்திடும் பயணத்தில்
வழிநடத்த திருவுளம் கொள்வீராக.
எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக
உம்மை மன்றாடுகின்றோம். — ஆமென்.

# மௌன மொழி

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

ஆலய மணியின் அருளிசை யோடு
வானகத் தூதர் ஏழிசை முழங்க
    வைகறைத் தென்றல் சில்லென வருட
    விரிகமழ் மலர்கள் தேன் சொரிந்தாட
புள்ளினம் கீச் கீச் பூபாளம் இசைக்க
பூஅமர் வண்டினம் மெல்லிசை பாட
    காலை இளங்கதிர் கரங்களை விரிக்க
    கானகக் குயில்கள் கவின்இசை மீட்ட
எழில்மிகு விடியலின் இன்னொலி யாவும்
இயற்கையின் இதய வேண்டல்களாக

    அகிலம் சூழும் ஆழ்கடல் பரந்த
    ஓயா அலையின் ஓங்கார இசையும்
கையொலித் தாளம் கரவொலி எழுப்ப
அன்பர்கள் பாடும் இன்னிசைப் பாட்டும்
    தமதன்பினைக் கூறத் தாளமுடன் இசைக்க —
அந்த
    இறைபுகழ் இசையின் ஓசையின் ஊடே — என்
ஆழ்மனக் கிணற்றின் ஊற்றெனப் பெருகும்
அன்புநீர்ச் சுவையைநீ அறிவாயோ இறைவா!
    எனதன்பினைச் சொல்லும் மௌன மொழியின்
    மென்மையை நீயும் அறிவாயோ இறைவா!





பொதுவாழ்வைத் தொடங்குமுன் நாற்பது நாட்கள் பாலைவனத்தில் உணவு எதுவும் உட்கொள்ளாமல் இறைவேண்டலிலும், தவத்திலும் ஈடுபட்டிருந்தார். திருமுழுக்கின் போது பெற்ற அப்பா அனுபவம் அவரது இறையாட்சிப் பணிகளின் அடித்தளமாக அமைந்திருந்தது. தூய ஆவியாரால் அவர் ஆட்கொள்ளப்பட்டவராய் நற்செய்தியை முழங்கினார். தனக்குப் பின் தனது பணியை தொடர்ந்தாற்ற பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக இரவெல்லாம் தனிமையில் செபத்தில் ஆழ்ந்திருந்தார். அவர்கள் தமது பணிகளை ஆர்வமுடன் பகிர்ந்து கொண்ட போது இயேசு அக்களிப்புற்று தந்தையாம் இறைவனைப் போற்றினார். பணிகளின் மத்தியிலும் மலை, சமவெளி, கடற்கரை ஆகியவற்றைத் தேடிச் சென்று தனிமையில் தந்தையோடு உறவாடுவதைப் போன்று தனது சீடர்களும் சற்றே அமைதியில் நிலைத்திருக்க அவர்களைப் பழக்கினார். தனது சீடர்கள் இறைவனின் நாமத்தைப் போற்றவும், அவரது ஆட்சி மண்ணுலகில் மலரவும், இறைத்திருவுளம் நிறைவேறவும், இறைப்பராமரிப்பின் மீது நம்பிக்கை கொள்ளவும், மன்னிக்கவும், மன்னிப்பு பெறவும், சோதனை, தீமைகளில் விழாதபடி காப்பாற்றவும் செபிக்க கற்றுக் கொடுத்தார். துன்பங்களின் உச்சகட்ட நேரத்தில் முழந்தாள் படியிட்டு இறைவனிடம் வேண்டினார். தனது நெருங்கிய மூன்று சீடர்களை விழித்திருந்து செபிக்கக் கேட்டுக்கொண்டார். தந்தையோடு ஒன்றித்த நிலையில் சிலுவையில் தன்னைக் கொலை செய்தவருக்காக மன்னிப்பை வேண்டினார். தனது ஆவியை தந்தையின் கையில் ஒப்படைத்து நமக்காக உயிர் துறந்தார். இயேசுவுக்கு இறைவேண்டல் என்பது விண்ணகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவது. அதை தனது செப வேளையில் உய்த்துணர்ந்தார். அதுவே அவருக்கு உணவும் பானமுமாக அமைந்திருந்தது. இத்தகைய செப மனிதரை உருவாக்கியதில் அன்னை மரியா பெரும் பங்கு வகித்தார். அந்த உருவாக்கத்தில் தன்னையும் செப அன்னையாக, செபிக்கும் அன்னையாக தன்னை உருமாற்றினார்.

**செபிக்கும் பெற்றோர்**

தாயைப்போல் பிள்ளை என்பதற்கேற்ப, நமது அன்னை மரியாவின் பெற்றோர் இறைப்பற்று மிக்கவராக இருந்தனர். வயது முதிர்ந்தும் ஒரு வாரிசு இல்லையே என்ற கவலை அவர்களை ஆட்கொண்டிருந்தது. இறைவேண்டலிலும், தவத்திலும் ஈடுபட்டிருந்தனர். தங்களுக்கென ஒரு குழந்தை பிறந்தால் அதை இறைவனுக்கே அர்ப்பணிக்க உறுதி பூண்டனர். அன்னா, சுவக்கீன் என்ற இந்தப் பெற்றோருக்கு மரியா என்ற ஒப்பற்ற பேரழகு வாய்ந்த குழந்தை கொடையாகக் கொடுக்கப்பட்டது. அருள் நிறைந்தவராகவும் அமல உற்பவியாகவும் பிறந்த மரியாவுக்கு வீட்டிலேயே ஒரு சிறப்பான இடம் அளிக்கப்பட்டு மூன்று வயது வரை அவரைப் போற்றி பேணிக் காத்தனர். பின்னர் எருசலேம் ஆலயத்தில் திருப்பணிகளில் மரியா ஈடுபட்டிருந்ததாக மரபுச் செய்தி கூறுகிறது. சிறு பருவத்திலேயே திருச்சட்ட நூல்களைப் பற்றிய விளக்கங்களைக் கேட்பதில் சிறுமி மரியா ஆர்வம் காட்டி இருப்பதையும் தெரிய வருகிறோம். இவ்வாறு மரியாவின் பெற்றோர் தாங்கள் வேண்டும் வரம் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு

வேண்டினார்கள். இறைவனுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, குழந்தையை கோவிலுக்கு அர்ப்பணித்து பிரமாணிக்கத்துடன் வாழ்ந்தனர். தமது மகளை இறை அன்பிலும், உயர் ஒழுக்க நெறியிலும், அறச்செயல்கள் புரியும் ஆர்வத்திலும் நிச்சயம் வளர்த்தெடுத்திருக்க வேண்டும். ஒரு குழந்தை தன் பெற்றோரிடமிருந்தே செபிக்க கற்றுக் கொள்கின்றது. பெற்றோரிடமிருந்து தான் கற்றுக் கொண்ட அனைத்தையும் சிறப்பாக தனது மகனுக்கும் அன்னை மரியா வழங்கியிருப்பார். நாசரேத்து இல்லம் ஒரு செப இல்லமாக இருந்ததில் ஆச்சரியம் இல்லை. காலங்கள் மாறினாலும் அறிவியல் தொழில் புரட்சிகள் நிகழ்ந்தாலும் என்றுமே குழந்தைகள் இறை அச்சம், இறை ஞானத்திலும் ஆகிவற்றில் வளர அவர்களுக்கு செபிக்கக் கற்றுக் கொடுப்பது பெற்றோரின் இன்றைய தலையாய கடமையாகும். இத்தகைய இல்ல மறைப்பணியில் தாத்தா பாட்டிமார் தங்களை ஈடுபடுத்துவது திருஅவை அவர்களுக்கு கொடுக்கும் அழைப்பாகும். நமது இல்லங்களை நாசரேத்து இல்லமாக மாற்றுவோம். திருக்குடும்பத்தில் நிலவிய உண்மையான மகிழ்வு, பகிர்வு, விட்டுக் கொடுத்தல் நமது உள்ளங்களின் அனுபவமாகட்டும்.

**செபிக்கும் மரியா**

மரியா எப்போதும் செபித்து வந்தார். செபமாகவே மாறினார். ஏனெனில் எப்போதும் அவர் இயேசுவின் சீடத்தியாக இருந்தார். இறைவார்த்தையைக் கேட்பதிலும், அதை வாழ்வாக்குவதிலும் முனைப்புடன் இருந்தார். அவரிடத்திலிருந்தது தேர்ந்து தெளியும் இதயம் மட்டுமல்ல் அனைத்தையும் இதயத்தில் பொதிந்து பொக்கிஷமாக வைத்து சிந்திக்கும் இதயத்தையும் அவர் பெற்றிருந்தார். இன்று திருஅவையில் காணப்படும் நலமான அடையாளங்களில் ஒன்று கிறிஸ்தவர்கள் தனி செபத்தில் ஈடுபட்டு இறைவனிடம் ஒன்றித்திருக்க விரும்புகின்றனர். இத்தகைய ஒரு வாழ்வு முறைக்கு எடுத்துக்காட்டாய் அமைபவர் அன்னை மரியா. அவர் வாழ்வில் இடம் பெற்ற ஒவ்வொரு நிகழ்விலும் அவரது செப மனநிலையை உணர முடிகிறது.

'அருள் மிகப்பெற்றவரே வாழ்க் ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்ற இறைவனின் வாழ்த்தை ஏந்தி வந்த வானதூதரின் மீட்பின் அறிவிப்பு நிகழ்வு, மரியாவின் வாழ்வில் ஒரு உச்சகட்ட இறையனுபவமாக இருந்தது. அருள் நிலையிலேயே இவ்வாழ்த்தைப் பெற்றார். அவர் வாழ்வு அருளாகவே நிறைந்திருந்தது. இறைவனின் அன்பு மகள் என்ற உணர்வில் தன் வாழ்வைத் தொடர்ந்தார். செபவாழ்வின் நிறைவாய், அவரின் ஒப்பற்ற எடுத்துக்காட்டான சீடத்துவம் அமைந்திருந்தது. செபிக்கும் மரியா முதிர்ந்த வயதில் கருவுற்றிருந்த உறவினருக்கு உதவி செய்ய விரைகின்றார். உடலிலும், உள்ளத்திலும் ஆவியாரின் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டிருந்த அவர் எலிசபெத்தையும், யோவானையும் அதே ஆவியாரால் ஆட்கொள்ளப்பட வழியாகிறார். தான் ஆண்டவரின் தாய் என்பதைக் கேட்டதும் அந்த ஆண்டவராம் மெசியாவின் மீட்கும் செயல்பாடுகள் அனைத்தும் அவர் மனக்கண்ணில் பளிச்சிட அவரது இதயம் விடுதலை கீதத்தை எழுப்புகின்றது.

தொடரும்.................





இல்லாமல் நாளுக்கு ஒரு மறை உண்மை என்ற வகையில் ஜெபமாலையின் மகிழ்ச்சி, துயரம், மகிமை மறை உண்மைகள் அனைத்தையும் 15 காட்சிகளில் பெர்னதெத்தை ஜெபிக்க செய்தார். ஒரு காட்சியின் போது மரியாவின் கட்டளையை ஏற்று பெர்னதத் தோண்டிய நீர் ஊற்று இப்பொழுதும் பல நோய்களை தீர்க்கும் அருமருந்தாக இருக்கிறது.

**பாத்திமா அன்னை காட்சி**

போர்ச்சுக்கல் நாட்டில் பாத்திமா நகரில் கிபி 1917 - ஆம் ஆண்டு மே 13 - ஆம் தேதி முதல் அக்டோபர் 13 - ஆம் தேதி வரை லூசியா சான்டோஸ், ஜெசிந்தா மார்த்தோ, பிரான்சிஸ்கோ மார்த்தோ என்ற ஆடு மேய்க்கும் மூன்று சிறாருக்கு அன்னை மரியா 16 முறை காட்சியளித்தார். அன்னை அவர்களிடம் நான் ஜெபமாலை அன்னை மக்கள் தங்கள் வாழ்வை திருத்தி அமைக்க வேண்டும். தங்கள் பாவங்களுக்காக கடவுளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். எல்லோரும் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும். பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபமும், தவமும் மேற்கொள்ளப்பட வேண்டும் உலகம் எனது மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று கூறினார். இரண்டாம் உலகப்போர், ரஷ்ய நாட்டின் மனமாற்றம் குறித்த அன்னையின் முன்னறிவிப்புகள் அப்படியே பலித்ததால் பாத்திமா அன்னை காட்சி மிகவும் பிரபலமடைந்தது.

**சலேத் அன்னை திருக்காட்சி**

பிரான்ஸ்சின் தென்கிழக்கு பகுதியில் இருக்கும் சலேத் என்ற நகரில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோர்ப் என்ற சிற்றூரில் மெலானி கால்வத், மேத்யூ என்ற கல்வி, மறைக்கல்வி திருவருட்சாதனம் குறித்து ஏதும் அறியாத, கல்வி மறுக்கப்பட்ட ஏழை சிறுமிக்கும் அதே ஊரில் உள்ள மேக்சிமன் ஜெரார்ட் என்ற மாடு மேய்க்கும் சிறுவனுக்கும் 1846 - ஆம் ஆண்டு செப்டம்பர் 19 - ஆம் தேதி பிற்பகலில் மரியன்னை தெய்வீக ஒளியுடன் காட்சி கொடுத்தார். அதைக்கண்ட மெலானியும், மேக்சிமனும் அதிர்ந்து போய் நின்றார்கள் ஆனால் அன்னை மரியாள் அவர்கள் இருவரையும் அருகே அழைத்து அவர்களிடம் மக்கள் மனம் மாறி தங்களை கடவுளிடம் ஒப்படைக்கவேண்டும். உங்களுக்காக நான் காலம் முழுவதும் துன்பப்படுகிறேன், என்னுடைய மகன் உங்களை கைவிட்டுவிட நான் விரும்பவில்லை அதற்காக நீங்கள் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும் என்று கூறி மறைந்தார் அது முதல் இவ்வன்னையை சலேத்அன்னை என மக்கள் வணங்கி வருகிறார்கள்.

இப்படியாக மரி அன்னையின் பல திருக்காட்சிகளின் போது அவர் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் மக்களின் நலனுக்காகவும் இறை இயேசுவின் வழியில் மக்களை ஒன்றிணைந்து வழிநடத்தவே பயன்படுத்திக் கொண்டார் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. ஆகவே, மரி அன்னையின் ஆசைப்படி நாம், இறையேசு காட்டிய பாதையில் ஜெப, தவ முயற்சிகளில் ஈடுபட்டு திருச்சபையின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்பதே அனைவரின் எண்ணம்



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑧

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### அன்னை மரியாளின் அற்புதக் காட்சிகள்

அன்னையின் அற்புத திரு காட்சிகள் சிலவற்றை சென்ற இதழில் கண்டோம். மரியன்னையின் திருக்காட்சிகளை எல்லாம் சொல்ல வேண்டும் என்றால் நிச்சயமாக இந்த ஒரு நூல் போதாது. சென்ற இதழின் தொடர்ச்சியாக இன்னும் சில முக்கியமான திருக்காட்சிகளை இப்போது காண்போம்.

### வேளாங்கன்னி அன்னை காட்சி

கிபி 1570 - ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வேளாங்கண்ணி என்னும் சிற்றூரில் அன்னை மரியாள் காட்சியளித்தார். பால் கொண்டு சென்ற சிறுவன் ஒருவனுக்கு தோன்றி அவன் மூலமாக பால் பொங்கி வழியும் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார். ஊனமுற்ற மோர் விற்றுக் கொண்டிருந்த சிறுவனுக்கு தோன்றி அவனது ஊனமுற்ற கால்களுக்கு குணம் அளித்து ஆரோக்கிய அன்னையாக தன்னை வெளிப்படுத்தினார். கிறிஸ்தவ பெரியவர் ஒருவருக்கு தோன்றி தனக்கு ஒரு ஆலயம் எழுப்புமாறு அன்னை கேட்டுக் கொண்டார். முதல் முதலாக அன்னைக்கு அவ்விடத்தில் ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டது. சிறிது காலத்துக்குப் பின் மரிஅன்னையின் உதவியால் கடலில் புயலில் சிக்க இருந்த ஒரு போர்ச்சுகீசிய மாலுமிகள் குழுவை தனது அற்புதத்தினால் காப்பாற்றினார். அந்த குழுவை சேர்ந்த போர்ச்சுகீசியர்கள் வேளாங்கன்னி கடற்கரையை அடைந்து அங்கு கட்டப்பட்டிருந்த அந்த சிற்றாலயத்தைக் கண்டு அவ்வாலையத்தை பெரிய அளவிலே கட்டினர். இன்றளவும் அவ்வாலயம் தமிழகத்தின் சிறந்ததொரு திருத்தலமாக விளங்குகிறது.

### லூர்து அன்னை காட்சி

பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து நகரில் மசபியேல் என்ற குகையில் கிபி 1858 - ஆம் ஆண்டு பிப்ரவரி 11 - ஆம் தேதி முதல் ஜூலை 16 - ஆம் தேதி வரை சுமார் 18 முறைகள் அன்னை மரியாள் பெர்னதெத் சூபிரூஸ் என்ற இளம் பெண்ணுக்கு காட்சி அளித்தார். மரியன்னையின் வேண்டுகோளை பெர்னதெத் அப்பகுதி ஆலய பங்கு தந்தையிடம் சொன்னபோது அவர் அதை நம்ப மறுத்தார். காட்சி தந்த பெண்ணின் பெயரைக் கேட்டு வருமாறு சொன்னார். மறுபடியும் அன்னை மரியாள் பெர்னதத்துக்கு காட்சி அளித்த போது "நானே அமல உற்பவம்" எனக்காக இங்கு ஓர் ஆலயம் எழுப்பப்பட வேண்டும் என்றும், அவ்வாலயத்தின் மூலமாக பாவிகள் மனமாற்றத்திற்காக மக்கள் ஜெபமும் தவமும் செய்ய வேண்டும் என்றும் கூறினார். அது மட்டும்





## அன்னையின் ㊿58 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.




### கருப்பு அன்னை (Black Madonna) பேராலயம், எயின்செயிடெல்ன் (EINSIEDELN) சுவிட்சர்லாந்து

எங்கு நோக்கிலும் வானுயர்ந்த மலைகளும், வற்றாத ஏரிகளும், கண்களுக்கு இனிமைதரும் பசும்புல் வெளிகளும் நிறைந்த சுவிட்சர்லாந்தை பார்க்கிற பொழுது, இறைவன் ஓரவஞ்சனை உடையவரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இயற்கை எழில் கொஞ்சும் இந்நாடு தமிழகத்தின் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியுடையது. ஆனால், மக்கள் தொகையோ 85 லட்சம் மட்டுமே. இயற்கை வளமும், பொருளாதார வசதியும் இருக்கும் பொழுது தூய்மைக்கும், சுகாதாரத்திற்கும் குறைவில்லை என்றே கூறவேண்டும். இந்நாட்டின் மக்களில் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்களாகவும், அவர்கள் சரிவிகிதமாக கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த சபைகளைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். ஏறக்குறைய 16ஆம் நூற்றாண்டுவரை கத்தோலிக்க மறையே செழித்தோங்கி இருந்த காரணத்தினால் அன்னையின் திருத்தலங்களுக்கும், துறவியர் மடங்களுக்கும் குறைவேயில்லை.

சுவிஸ் நாட்டின் பொருளாதார தலைநகரமாகிய சூரிக் (Zurich) தென்கிழக்கே 30 மைல் தொலைவில் எயின்செயிடெல்ன் கிராமம் அமைந்திருக்கிறது. ஜெர்மன் மொழியில் எயின்செயிட்லர் *(einsiedler)* என்றால் துறவி என்று பொருள்படும். இம்மலைப்பகுதி கிறிஸ்தவ சமயம் இப்பகுதியில் வேரூன்றுவதற்கு முன்பிருந்தே இது ஒரு புனித இடமாக கருதப்பட்டது. கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவத்தின் வேர்கள் இங்கு பரவ ஆரம்பித்தன. கி.பி. 828ஆம் ஆண்டு மெயின்ராட் (Meinrad) என்ற பிரபுத்துவ குடும்பத்தைச் சார்ந்த இளைஞர், உலக ஆசைகளை வெறுத்து துறவறம் மேற்கொண்டு, ரெயிச்எனவு (Reichenau) என்கிற இடத்தில் அமைந்திருந்த துறவுமடத்தில் வாழ்ந்து வந்தார். துறவற வாழ்விலேயே, ஹெர்மிட் (Hermit) என்றழைக்கப்படும் தனித்துறவியாக தனிமையில் வாழ விரும்பிய அவர், இப்பகுதியில் இருந்த காட்டிற்கு வந்து தனியாக வாழத்தொடங்கினார். அடர்ந்த காட்டிற்குள் 33 வருடம் அவர் தனிமையில் இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்தார். இவ்வாண்டுகள் முழுவதும் இரண்டு காகங்கள் மட்டுமே அவருக்கு துணையாக வாழ்ந்ததாக கூறுகின்றனர். கி.பி. 861ஆம் ஆண்டு சனவரி 21ஆம் தேதி, திருடர்கள்

அவரிடம் பொன்னும், பொருளும் இருப்பதாகக் கருதி அவரைத் தேடி வந்தனர். அவர்களின் எண்ணத்ததை மெயின்ராட் அறிந்திருந்து, அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்து அவர்களுக்கு உணவு வழங்கினார். பின் அவர்களிடம், " நீங்கள் என்னை கொன்ற பிறகு, என் அருகில் ஒரு மெழுகுதிரியை ஏற்றிவைக்க வேண்டுகிறேன்" என்று வேண்டினார். 'உப்பிட்டவரை உள்ளவும் நினை' என்கிற பழமொழியை பொய்யாக்கும் வகையில். அத்திருடர்கள் அவரைத் தாக்கிக் கொன்றனர். ஆனால், மெயின்ராட்டின் விருப்பத்திற்கிணங்க அவர் காலடியில் மெழுகுதிரியை ஏற்றிய பொழுது அவர்கள் உள்ளமும் ஒளிபெற்றது. குற்றவுணர்வும் அவமானமும் நிறைந்தவாகளாக, அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியபொழுது, இரண்டு காகங்களும் அவர்களின் தலைக்கு மேல் கரைந்து கொண்டே சென்று மக்களின் கவனத்தை ஈர்த்தன. 30 மைல் தொலைவிற்கு காகங்கள் அவர்களை துரத்திச் சென்றன. காகங்களின் அரிதான இந்த செயலைக் கண்ட சூரிக் மக்கள் அவர்களை பிடித்து விசாரித்தபோது, அத்திருடர்களின் மாபாதகம் வெளிப்பட்டது. அவர்களும் தண்டிக்கப்பட்டனர்.




மெயின்ராட், இறைவனோடு ஒன்றிருத்திருக்க காட்டிற்குள் சென்றபோது தன்னுடன் தேவதாயின் கருப்பு சிரூபம் ஒன்றை கொண்டுசென்றிருந்தார். மெயின்ராட்டின் எதிர்பாராத மரணத்திற்கு பிறகு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் அவ்விடத்திற்கு செல்ல எல்லோரும் அச்சமும், பயமும் கொண்டிருந்தனர். ஆண்டுகள் பல கழிந்தபின், தயக்கம் நீங்கிய சில துறவிகள் இறைவனால் தூண்டப்பெற்று, அங்கு செல்ல முன்வந்தனர். எனவே, அவர் வாழ்ந்த இடத்தில் ஒரு பெனடிக்டைன் துறவியர் மடம் ஒன்று கட்டப்பட்டது. மெயின்ராட் வாழ்ந்த இடத்திலேயே ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டு, அங்கு அந்த அன்னையின் கருமைநிற திருஉருவம் வைக்கப்பட்டது.



கி.பி. 948ஆம் ஆண்டு, கொன்ஸ்டான்ஸ் (Konstanz) நகர ஆயராக இருந்த புனித கொன்ராட், எயின்செயிடெல்னில் கட்டப்பட்ட ஆலயத்தை அர்ச்சிக்க வருகை புரிந்தார். ஆலய அர்ச்சிப்பிற்கு முதல் நாள் இரவில் புனித கொன்ராட் ஆண்டவர் இயேசுவும், அன்னை மரியாவும் விண்ணவர் புடைசூழ அந்த ஆலயத்தை அர்ச்சிப்பதை காட்சியாகக் கண்டார். அக்காட்சியில், "தூயவர், தூயவர் வான்படைகளின் கடவுளாம் ஆண்டவர்.... ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி" என்பதற்கு பதிலாக, "தூயவர், தூயவர் அன்னையின் முன் மகிமையுடன் இருக்கின்றவரே..... ஆண்டவர் பெயரால் வருகின்ற பேறுபெற்ற அன்னையின் மகனே" என்று வானவர் ஆர்ப்பரித்தனர். கனவின் பொருள் புரியாமல்





ஒரு மாதிரி, திருச்சபையின் முன்னோடி போன்ற மறையுரைகள் மறுமலர்ச்சியின் அறிகுறிகளே.

இன்று மரியா வணக்கத்திலும் சிந்தனையிலும் சங்கம் வழங்கும் கண்ணோக்கம் கடந்த புதியதொரு வளர்ச்சி தேவைப்படுகிறது. இந்த தேவை இன்று அதிகமான கிறிஸ்துவ சமூகத்தில் உணரப்படுகிறது. அதற்கான புதிய தேடல்களும் துவங்கியுள்ளன. மரியா பற்றி சங்கம் வழங்கியுள்ள படிப்பினை மரபுக் கண்ணோட்டத்தில் உள்ள ஊனங்களைக் கழைந்து உண்மையானதொரு மறுமலர்ச்சிக்கு வழிவகுப்பதுதான்.

எனவே, இன்று வழக்கத்தில் இருக்கும் பல்வேறு மரியா வணக்கமுறைகளும் சிந்தனைப் பாணிகளும் மறு ஆய்வுக்கு உள்ளாக்கப் பெற வேண்டும். அவை என்னென்ன உணர்வுகளையும் எண்ணங்களையும் மக்கள் மனதில் உருவாக்கி உறுதிப்படுத்துகின்றன. சமய-சமூக வாழ்வில் என்னென்ன பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன, குறிப்பாக எந்தெந்த சமய சமூக அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்படுகின்றன, மக்கள் பலரிடம் நிலவும் மிகைச் சார்பு, மாந்தரீக மனப்பான்மைகளைக் களைந்து இறைநம்பிக்கைகளும், தன்முயற்சிகளையும் எந்த அளவுக்கு வளர்த்து விடுகின்றன என குறைநிலை ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆய்வில் இறையியலுக்கும் உளவியல் சமூகவியல் கண்ணோட்டங்களும் இன்றியமையாதவை.

மேலும், இன்றைய மரியா வணக்கமும் சிந்தனையும் அவளது சிறப்புக்களையும் பெருமைகளையும் புகழ்ந்து பாடுவையாகவோ அல்லது செவிவழிகள் கேட்பவையாகவோ மட்டும் அமைந்து விடாமல் மக்களது இன்றைய அடிப்படை கேள்விகளுடன் அதிக தொடர்புபடுத்த வேண்டும். குறிப்பாக, இறைவனின் பெண்ணைமத்தன்மையின் தனிச்சிறப்பான ஒரு வெளிப்பாடாக மரியவை காணமுடியுமா? கிறிஸ்து ஒன்றிப்பிற்கு தடையாக இன்றி உதவிடும் வகையில் ஒரு புதிய முறையில் அவரை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? எல்லா மக்களது, அதிலும் குறிப்பாக ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்களது விடுதலை முயற்சிக்கு உதவும் ஊக்க சக்தியாக அவற்றை எவ்வாறு புதுப்பிப்பது என்பது பற்றியும் மரியா பக்தர்களும் மரியியலாளர்களும் இன்று ஆழமாக சிந்திக்க வேண்டும்.

ஆம், எந்த அளவுக்கு இன்றைய மக்களது அடிப்படை ஏக்கங்கள், எதிர்பார்ப்பகள், கேள்விகள் முழுவாழ்வு தேடும் முயற்சிகள் என்பவற்றிற்கு பதில் தர உதவுகின்றனவோ அந்த அளவுக்குத்தான் மரியாள் பக்தியும் மரியியல் சிந்தனையும் இன்று பொருளும் பயனும் உள்ளவையாக விளங்க முடியும்.

மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா பற்றிய சிந்தனைகள், நம் தேடல்கள் தொடரட்டும்.

மரியா பக்தியை மக்கள் மனதில் ஆழமாக பதிய வைத்தது இக்காலத்தில்தான். மேலும் மரியியல் எண்ணங்களிலும் எழுத்துப் படைப்புக்களிலும் இங்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதுவும் இக்காலத்தில் ஏற்படவில்லை. கடந்த 50 ஆண்டுகளில் மரியியல் பற்றிய தமிழில் தரமான நூல்கள் அதிகம் வெளிவரவில்லை. இங்குள்ள மரியா திருயாத்திரை மையங்களிலிருந்து வெளிவரும் மாத இதழ்களிலுள்ள கட்டுரைகளும், மறைமாவட்ட கலைத் தொடர்பு நிலையங்களிலிருந்து வெளியான பக்திப் பாடல்களும் வத்திக்கான் சங்கம் வழங்கியுள்ள புதிய கருத்துக்களையும் கண்ணோட்டத்தையும் தமிழகம் இன்னும் கேள்விப்படவே இல்லையா என எண்ணும் அளவிற்கு பெரிதும் மரபுப் பாணியிலே அமைந்திருந்தன.

இவ்வாறு மேலைநாடுகளில் மரியா வணக்கத்தில் ஒரு நலிவு நிலையும் இங்கு மரபுப் பாணியின் தொடர்ச்சியும் இடம்பெறக் காரணங்கள் யாவை? ஒன்று, மரபுக் கண்ணோட்டம் மக்கள், குருக்கள் மனதில் எளிதில் மாற்ற இயலாதவாறு ஆழமாக வேர்விட்டு வளர்ந்திருக்கிறது. இரண்டு, வத்திக்கான் சங்கம் வழங்கிய புதிய மரியியல் அணுகுமுறைகளின் உள்அர்த்தத்தையும், உடன் விளைவுகளையும் சரியாகப் புரிந்து இறையியலாரும் போதகர்களும் மக்களுக்கு எடுத்துக் கூற தவறியது. மூன்றாவதாக, மரியா வணக்கங்களும் நவநாட்டகளும் தாராளமாக வசூலைத் தந்துகொண்டிருந்ததாலோ என்னவோ அவற்றை மாற்ற வேண்டிய தேவையை உணராத ஒருசிலரின் மந்த நிலையும் ஒரு காரணம் எனக் கூறலாம்.

### தேடல்கள் தொடரட்டும்

இருப்பினும் வத்திக்கான் சங்கம் போதனையின் விளைவாக மரியா பக்திமுயற்சிகளில் மாற்றங்களே இல்லை எனக் கருதுவது சரியல்ல. திருப்பலி, நற்கருணை ஆசிர், நற்கருணை பவனிகள் போன்ற வழிப்பாட்டுக் கொண்டாட்டங்களில் மக்கள் செபமாலை சொல்வது, மரியா பக்திப் பாடல்களை இசைப்பது போன்ற மரியா பக்தி முயற்சியின் மிகைப்படுத்தல்கள் மறையத்துவங்கியது வத்திக்கான் சங்க போதனையின் ஒரு விளைவே. சங்கத்திற்குப் பிறகு மரியா வணக்கங்களும் நவநாள் பக்தி முயற்சிகளும், திருயாத்திரைகளும், திருநாள் கொண்டாட்டங்களும் திருப்பலியுடன் அதிகம் தொடர்புப்படுத்தப் பெற்றுள்ளன. அதனை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் சங்கம் காட்டிய கிறிஸ்து மையக் கண்ணோக்க மரியாள் பக்தியில் இவ்வாறு ஓரளவு இடம் பெற்றிருக்கிறது. பெரும்பாலான பக்தசபைகள் சங்கத்திற்கு பின்பும் மரபு பணியிலே தொடர்ந்தாலும் சில இடங்களில் மாதா சபை கிறிஸ்து வாழ்வு சமூகம் என தனது பெயரையும் செயல்முறைகளையும் மாற்றிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சில குருக்கள் மரியாளின் வீரம், நம்பிக்கை, விடுதலை வாழ்வு இறையரசு பணிக்கான தன்னர்ப்பணம், மரியாள்







பரிதவித்தார் புனித கொன்ராட். மறுநாள் காலை துயில் எழுந்து, தயராகி ஆலய அர்ச்சிப்பிற்கு சென்று வழக்கமான அர்ச்சிப்பு செபத்தை புனித கொன்ராட் தொடங்க இருந்த நேரத்தில், 'சகோதரரே, நிறுத்தும். ஏனென்றால், இந்த ஆலயத்தை ஏற்கனவே வல்லமைமிக்க கடவுள் அர்ச்சித்துவிட்டார்' என்ற குரலைக் கேட்டு வழக்கமான அர்ச்சிப்பு செபங்களை சொல்லவில்லை என்று பாரம்பரியம் கூறுகிறது. எனவே, உலகத்திலேயே மனித அர்ச்சிப்பு செபங்கள் இல்லாமல், எல்லாம்வல்ல இறைவனால் நேரடியாக அர்ச்சிக்கப்பட்ட ஆலயம் இது என்று கூறப்படுகிறது.

எனவே, இன்றளவும் எயின்செயிடெல்ன் ஆலயத்தில் பாடப்படும் "தூயவர்" என்கிற பாடல் மேற்சொல்லப்பட்ட மாற்றத்துடனே பாடப்படுகிறது. அங்கிருந்த சிலர் இத்தகைய மாற்றங்களுக்கு உடன்படவில்லை. எனவே, இப்பிரச்சினையானது, திருத்தந்தையின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்நாட்களில் திருத்தந்தையாக இருந்த 12ஆம் ஜான், புனித கொன்ராட்டின் காட்சியை உண்மை என்று அறிவித்ததோடு, "தூயவர்" என்கிற பாடலை தகுந்த மாற்றங்களோடு அந்த ஆலயத்தில் கூறவும் அனுமதியளித்தார். இறைபராமரிப்பின் உச்சமாக, இறைவன்தாமே தன் அடியவரான அன்னையோடு வானவர் புடைசூழ அந்த ஆலயத்தை அர்ச்சித்த செய்தியானது எல்லா இடங்களுக்கும் பரவி, இன்றளவும் அது ஒரு பிரசித்திபெற்ற திருத்தலமாக விளங்குகிறது.

பழமையான இந்த ஆலயங்கள் வரலாற்றின் பல்வேறு தீவிபத்துக்களாலும், இயற்கை சீற்றங்களாலும் அழிக்கப்பட்டன. இத்தகைய நிகழ்வுகளுக்கு இந்த ஆலயமும், துறவு மடமும் விதிவிலக்கல்ல. கி.பி. 1029 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிபத்தில் ஆலயமும், துறவற மடமும் முற்றிலும் நாசமாயின. கி.பி. 1031 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புனரமைப்பு பணிகள் கி.பி. 1039ஆம் ஆண்டு நிறைவுபெற்றன. இந்த ஆலயம் எதிர்கால ஆலய கட்டிடங்களுக்கு அடித்தளமாக அமைந்தது.



கி.பி. 1465ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் ரொமென்ஸ்கோ கட்டிட கலையில் கட்டப்பட்டிருந்த அன்னையின் திருஉருவத்தை தாங்கிய இப்பழமையான ஆலயம் முற்றிலும் சேதமடைந்தது. ஆனால் அற்புதமாக அன்னையின் திருஉருவம் எவ்வித சேதமும்

இன்றி பாதுகாப்பாக இருந்தது. ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளாக அவ்விடத்தில் அருள்பாலித்த அன்னைக்கு, ஒரு புதிய ஆலயம் எழுப்பி அப்பகுதி ஆட்சியாளர்களும், மக்களும் பெரிதும் விரும்பினர். பெரும் பொருள் செலவிலும், மக்களின் ஒத்துழைப்பாலும் கோதிக் கட்டிட கலையில் இன்று நிற்கும் இந்த ஆலயம் எழுப்பப்பட்டது. கி.பி. 1509 மற்றும் கி.பி. 1577 ஆம் ஆண்டுகளில ஏற்பட்ட தீவிபத்துக்களிலும் இந்த ஆலயம் பாதிப்பிற்குள்ளாகி புனரமைக்கப்பட்டது.



கி.பி. 1674 ஆண்டு முதல் கி.பி. 1684ஆம் ஆண்டு வரை ஆலயத்தில் கட்டிட வடிமைப்பாளர்கள் ஹான்ஸ் ஜோர்க் குயென் மற்றும் பிரேஜென்ஸ் தலைமையில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகளின் போது ஆலய மையப்பீடத்திற்கு பின் உள்ள துறவியர் செபிக்கும் இடமும், ஒப்புரவு அருட்சாதன சிற்றாலயமும் கட்டப்பட்டன. கி.பி. 1704ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி துறவுமடத்தலைவர் மௌருஸ் வொன் ரோல் காலத்தில் ஆலயத்தை முற்றிலுமாக புதுப்பிக்கும் பணிகள் தொடங்கின. ஆலயத்தை மையமாகக் கொண்டு, இருபுறமும் சதுரவடிவிலான துறவற இல்லத்தின் கட்டிட பணிகள் அருட்சகோதரர் கஸ்பார் அவர்களின் முன்வரைவு திட்டத்தின்படி தொடங்கப்பட்டது. துறவற இல்லத்தின் பணிகள் கி.பி. 1718ஆம் ஆண்டு முடிக்கப்பட்டன. கி.பி. 1719ஆம் ஆண்டு துறவுமடத்தலைவர் தாமஸ் அவர்களின் பணிக்காலத்தில் ஆலய பணிகள் தொடங்கப்பட்டன. ஆலய வடிவமைப்பில் மிலான் நகரைச் சார்ந்த பொறியாளரின் கைவண்ணம் இருப்பதாகக் கூறப்பட்டாலும், அவரின் பெயர் இன்றளவும் அறியப்படவில்லை என்பது ஆச்சரியம் தரும் தகவலாகும். துறவுமடத்தின் ஆலயமானது ஜெர்மனியைச் சார்ந்த கோஸ்மாஸ் தமியன், எஜிட் குயிரின், வடக்கு இத்தாலியைச் சார்ந்த தியேகோ மற்றும் கார்லோ கார்லோனே என்பவர்களின் அற்புத கலைத்திறமையால் மிளிர்கிறது. புதுப்பிக்கப்பட்ட ஆலயமானது கி.பி. 1735ஆம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்டது.



துறவு மடத்தின் வடபுறத்தில் 136 மீட்டர் உயரமுள்ள பளிங்கு கற்களான ஆலய முகப்பு அமைந்துள்ளது. ஆலய முகப்பில் அரைவட்ட வடிவில் அமைந்துள்ள திருத்தல



ஆகட்டும்



# மரியா - கடவுளின் கடிதம்



26

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## மலர்ந்தும் மலராத ஒரு மறுமலர்ச்சி

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மரியா பற்றி வழங்கியுள்ள மறுமலர்ச்சிப் பார்வையும் மரியா வணக்கத்திற்கு இது வகுத்துக் காட்டியுள்ள புதிய பாதையும் கத்தோலிக்க சமூகத்தில் மரியா வணக்கத்திலும் சிந்தனையிலும் உள்ள மிகைப்படுத்தல்களைக் களைந்து அவற்றில் உண்மையான ஒரு புதிய வளர்ச்சியை விளைவிக்கும் என அன்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பு உடனடியாக நிறைவேறியது என்று நாம் சொல்ல இயலாது. மேலை நாடுகளில் சங்கத்தை தொடர்ந்த காலத்தில் சமய வாழ்வில் பரவலாக ஏற்பட்ட நலிவுநிலை மரியா வணக்கத்தையும் பாதித்தது. சங்கத்தையொட்டிய இறையியலில் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட சிந்தனைப் பெருவளர்ச்சி மரியியலில் ஏற்படவில்லை. இவ்வாறு சங்கத்திற்கு முன்பு கத்தோலிக்க வழிபாட்டிலும் சிந்தனையிலும் ஒரு வகை "மரியா மையம்" நிலவியதென்றால் அதற்கு நேர்மாறாக சங்கத்திற்குப் பிறகு மேலை நாடுகளில் மரியா பற்றிய எண்ணமும் எழுத்துக்களும் மிகவும் அரிதாயின.

நமது இந்திய கத்தோலிக்க சமூகங்களில் பெருமளவுக்கு மரபுப் பணியிலேயே மரியா நவநாட்களும், திருவிழாக்களும், திருயாத்திரைகளும் தொடர்ந்தன. பெரும்பாலான குருக்களும் பழைய பாணியிலே மரியாவின் விண்ணக மாண்புகள் மகிமைகளையும், வியத்தகு சிறப்புப் பெருமைகளையும், வரம் எதுகேட்டாலும் தரத்தவறாத அவரது வரம்பற்ற வள்ளன்மையையும் பற்றியே மறையுரைகள் ஆற்றி பெரிதும் உணர்ச்சிமயமான ஒரு மரியா பக்தியையே தொடர்ந்து வளர்த்துக் கொண்டிருந்தனர். புதிது பதிதாக தோன்றிய நவநாள், திருநாள் கொண்டாட்டங்களும் பெருமளவுக்கு இதே பாணியில்தான் அமைந்திருந்தன.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இதே நிலைமையே. ஒருவகையில் இன்னும் அதிகமாகவும் ஆழமாகவும் இருந்தது எனலாம். சகாய மாதா நவநாட்கள் போன்ற மரியா பக்தி முயற்சிகள் மாற்றம் அதிகமின்றி மரபு பாணியிலே தமிழகம் எங்கும் பரவியதே சங்கத்திற்கு பிற்பட்ட காலத்தில்தான். அதுபோல வேளாங்கன்னி போன்ற திருத்தல இடங்களில் பெரிதும் மரபு பாணியிலேயே நடந்த மரியா வணக்கங்களில் தங்கள் பக்தியை வெளிப்படுத்த மக்கள் கூட்டம் கடல்போல் வந்து குவியத் துவங்கியதும் பெரிதும் சங்கத்திற்குப் பின்புதான். அன்னை வேளாங்கன்னி, வில்லியனூர் மாதா என்னும் திரைப்படங்கள் வெளிவந்து

ஆகட்டும்



## முத்திப்பேறு யோவான் ஆஞ்சலோ போர்ரோ O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

முத்திப்பேறு. யோவான் ஆஞ்சலோ போர்ரோ 1451 ஆம் ஆண்டு மிலான் நகர கட்டுப்பாடில் இருந்த செவேசொ என்கிற ஊரில் பிறந்தார். 1470 ஆம் ஆண்டு மிலானில் உள்ள நமது மரியின் ஊழியர் மடத்தில் சேர்ந்தார். 1474 ஆம் ஆண்டு பிளாரென்ஸ் நகருக்கு அனுப்பப்பட்டார். அனைத்து படிப்புகளிலும் சிறந்து விளங்கியதால், மூன்று வருடத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். நமது தாய்வீடான மோன்தே செனாரியோவில் ஒரு ஆன்மிக மறுமலர்ச்சி தேவைப்பட்ட காரணத்தினால், முதன்மை சகோதரராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 20 ஆண்டுகள் அங்கேயே இருந்து தவ வாழ்க்கை வாழ்ந்து, மோன்தே செனாரியோவின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு அடித்தளமிட்டார். இதன்பின் 1495 ஆம் ஆண்டு தனது சொந்த ஊரான மிலான் நகரத்திலும் ஒரு ஆன்மிக மலர்ச்சி தேவைப்பட்டதால், மோன்தே செனாரியோவிலிருந்து மிலான் நகருக்கு அனுப்பப்பட்டார். இங்கு உள்ள மரியின் ஊழியர் மடத்திலும் முதன்மை சகோதரராக இருந்து சிறப்பாக பணியாற்றினார். இருபது வருடமாக தவ வாழ்க்கையில் மலையின் மேல் வாழ்ந்தவருக்கு, நகர வாழ்க்கை பற்றி என்ன புரிந்திருக்கும் என்று நம்மில் ஒரு சிலருக்கு கேள்விகள் வரலாம். ஆனால், இவர் நகரத்தில் உள்ள ஒவ்வொரு தெருக்களுக்கும் சென்று சிறுவர்களிடம் உரையாட ஆரம்பித்தார். இதன் மூலம் எவ்வாறு சிறுவர்கள் கிறிஸ்தவ கல்வியைப் பற்றிய சிந்தனை கூட இல்லாமல் வாழ்கிறார்கள் என்று உணர்ந்தார். ஒரு சமுதாயத்தை மாற்ற வேண்டுமென்றால் அது சிறுவர்களிடமிருந்துதான் தொடங்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டார். அவர்களுக்கு கிறிஸ்தவ ஞானத்தை ஊட்ட வகுப்புகள் எடுத்தார். அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பயிற்சி அளித்தார். எனவேதான், சிறுவர் மறைக்கல்வி என்று முதன்முறையாக மிலான் நகரத்தில் ஆரம்பித்த பெருமை நமது முத்திப்பேறு. யோவான் ஆஞ்சலோ போர்ரோவை சாரும். இவ்வாறு நல்லமுறையில் ஒரு ஆன்மிக சமூக மாற்றத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கும் பொழுது, எதிர்பாராதவிதமாக, 23 அக்டோபர் 1505 ஆம் ஆண்டு தன்னுடைய 54 ஆம் வயதிலேயே இறைவனடி சேர்ந்தார். 1511 ஆம் ஆண்டிலிருந்தே, நமது மரியின் ஊழியர் சபையின் புனிதர்கள் பட்டியலில் இவருடைய பெயரும் இருப்பது, அவர் எந்த அளவுக்கு புனிதராக வாழ்ந்திருப்பார் என்பதை நமக்கு தெரியப்படுத்துகிறது. மிலான் நகரில் உள்ள மக்கள் இவருடைய உடலை சந்தித்து வேண்டுவது பல நூற்றாண்டுகளை கடந்து இன்றும் ஒரு வழக்கமாய் இருக்கிறது. 1737 ஆம் ஆண்டு திருத்தந்தை ஏழாம் கிளமெண்ட் இவருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கினார். ஒரு மரியின் ஊழியர், வெறும் தவ வாழ்க்கையில் மட்டும்தான் அல்லது வெறும் சமூக வாழ்க்கையில் மட்டும்தான் பணி செய்ய வேண்டும் என்பது அல்ல. மாறாக இருக்கும் இடத்தில் அந்த மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து, தவ மற்றும் சமூக வாழ்க்கையை ஒன்றாக எடுத்து செல்வதே ஒரு நல்ல மரியின் ஊழியர் என்பதற்கு நமது முத்திப்பேறு. யோவான் ஆஞ்சலோ போர்ரோ ஒரு முன்மாதிரி.





பயணியர் நுழையும் பகுதி, ஆலய படிகளும் ஆலயத்தின் பிரமாண்டத்தை அறிவிப்பதாக அமைந்துள்ளன. ஆலயமுகப்பின் இருபுறமும் கட்டப்பட்டுள்ள கோபுரங்கள் தொலைவில் இருந்து காண்போரின் கண்களுக்கு தெரியும் வகையில் அமைந்துள்ளன. ஆலய படிகளை நாம் ஏறத்தொடங்கும் முன் அன்னையின் நீரூற்று ஒன்றும் அமைந்துள்ளது. வேண்டுதல்களோடு இந்நீரூற்றிலிருந்து நீரை பருகும் அனைவருக்கும் அவர்கள் வேண்டியது நடக்கிறது என்கிற ஐதீகம் உள்ளது. நவீன காலம், கணினி உலகம் என்றெல்லாம் கூறப்படும் இக்காலத்திலும் நம்பிக்கையோடு இந்நீரூற்றிலிருந்து எண்ணற்ற திருப்பயணிகள் கைகால் கழுவுவதையும் நீர் அருந்துவதை பார்த்த பொழுது மெய்சிலிர்த்தது எண்ணவோ உண்மை.

கி.பி. 1838ஆம் ஆண்டு முதல் கி.பி. 1841ஆம் ஆண்டு வரை மற்றொரு சீரமைப்பானது இந்த ஆலயத்தில் நடைபெற்றது. இம்முறை, கருப்பு அன்னை இருக்கும் சிற்றாலயத்திற்கு மேல் எண்கோண கோபுரம் ஒன்று எழுப்பப்பட்டது. கி.பி. 1883ஆம் ஆண்டு ஆலயத்தின் ஸ்திரத்தன்மையை அதிகரிக்கும் வகையில் இரும்பு வலைகளால் மேற்கூரையானது மூடப்பட்டது. ஆலய மையத்தின் இருபுற பகுதிகளும், கி.பி 1900ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டன. இறுதியாக, 22 ஆண்டுகள் புனரமைப்பிற்கு பிறகு, கி.பி. 1997ஆம் ஆண்டு இந்த ஆலயமானது அதன் பழமையான பரோக் கட்டிட வடிவத்திற்கு மீட்டெடுக்கப்பட்டு கலைநயத்தோடு மிளிர்கிறது.

**ஆலயத்திற்குள் அமைந்துள்ள கருப்பு அன்னையின் சிற்றாலயம்:**

இந்த சிற்றாலயம் அமைந்துள்ள பகுதிதான் துறவி மெயின்ராட் வாழ்ந்த அறை அமைந்திருந்த இடமாகும். இந்த சிற்றாலயம்தான் இறைவனால் நேரடியாக அர்ச்சிக்கப்பட்ட இடமாக நம்பப்படுகிறது. பல்வேறு தீவிபத்துகளினால் பாதிக்கப்பட்டிருந்த இந்த சிற்றாலயத்தைப் புதுப்பிக்க கி.பி. 1614ஆம் ஆண்டு சால்ஸ்புர்க் பேராயராக இருந்த மாற்குஸ் சித்திகுஸ் நிதியுதவி செய்ததோடு, சால்ஸ்புர்க் பேராலயத்தைக் கட்டுவித்த சந்தினோ சோலாரி என்கிற கட்டிட நிபுணரை அப்பணிகளை மேற்கொள்ள பணித்தார். இவரின் கைவண்ணத்தில் சிற்றாலயத்தின் முகப்பானது அன்னைக்கு வானதூதர் இயேசுவின் பிறப்பை அறிவித்தல், இயேசுவின் பிறப்பு, அன்னையின் உறக்கம் மற்றும் விண்ணேற்பு நிகழ்வுகள் பளிங்குகல் சிற்பங்களால் மிளிரச் செய்தார். பேராயரின் சகோதரர் கஸ்பார் பிரபு அவர்களின் நிதியுதவியால் சிற்றாலயத்தின் ஏனைய மூன்று பகுதிகளும் கலைநயத்தோடு புதுப்பிக்கப்பட்டன.

கி.பி. 1798ஆம் ஆண்டு மே மாதம் பிரெஞ்ச் படைகள் எயின்செயிடெல்ன் கிராமத்தைக் கைப்பற்றி அன்னையின் சிற்றாலயத்தை சிதைத்தனர். நெப்போலியனின் தோல்விக்கு பிறகு, கி.பி. 1816 – 1817ஆம் ஆண்டுகளில் அன்னையின் சிற்றாலயமானது பழமை மகிமையோடு மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது.

சிற்றாலய மையப்பீடத்தில் குழந்தையை கையிலேந்தியவளாக அருள்பாலிக்கும் அன்னையானவள் கி.பி. 1600ஆம் ஆண்டிலிருந்து ஸ்பானிய அரசவைக்குரிய ஆடைகளுடன் காட்சி தருகிறாள்.


இயற்கை எழில்கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ள இத்திருத்தலத்தை காணவும், திருப்பலியில் பங்கேற்கவும் உதவிய திருவாளர். ஜான்-ஜீலி, திருவாளர். வதனன் மற்றும் திருவாளர். ஜோசப்-ராணி குடும்பத்தினருக்கு என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

திருப்பயணம் தொடரும்..........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## தொடக்க நூல் 26-50



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

1)ஈசாக்கு அவர்களுக்கு விருந்து அளித்தார். .......... உண்டு குடித்தனர்

4)இவ்வாறு யாக்கோபு பதான் ............ திரும்பி வந்தபின் கானான் நாட்டைச் சார்ந்த செக்கேம் நகருக்கு நலமுடன் வந்து சேர்ந்தார். அந்நகருக்கு எதிரே பாளையம் இறங்கினார்.

5)நீங்கள் கேட்டபடி செய்ய எங்களால் முடியாது. ஏனெனில் விருத்தசேதனம் செய்துகொள்ளாத ஆடவனுக்கு எங்கள் சகோதரியைக் கொடுப்பது ..........

6)அப்பொழுது ரெபேக்காவின் பணிப்பெண்ணாகிய தெபோரா ............ பெத்தேலின் அடிவாரத்திலிருந்த ஒரு கருவாலி மரத்தடியில் அவள் அடக்கம் செய்யப்பட்டாள்

11)அப்பொழுது யோசேப்பு தம் .......... அனைவர் முன்னிலையிலும் இதற்குமேல் தம்மை அடக்கிக் கொள்ள முடியாமல், 'எல்லோரும் என்னைவிட்டு வெளியே போங்கள்' என்று உரத்த குரலில் சொன்னார்.

13)அவர் யோசேப்புக்கு ஆசி வழங்கிக் கூறியது: என் தந்தையரான ஆபிரகாமும் ஈசாக்கும் எந்தக் கடவுள் திருமுன் நடந்து வந்தனரோ அந்தக் கடவுளே ...... வரை என் வாழ்நாள் முழுவதும் எனக்கு ஆயராக விளங்கிவருகிறார்.

**இடமிருந்து வலம்**

2) .......... பெற்ற ஆசியை அவர் உனக்கும் உன் வழிமரபினருக்கும் வழங்குவாராக!

3)அவர், உன் கண்களை உயர்த்திக் கிடாய்கள் யாவும் வரியும் கலப்புநிறமும் புள்ளியும் உடைய ஆடுகளுடன் பொலிவதைப் பார். ஏனெனில், லாபான் உனக்குச் ........ அனைத்தையும் நான் கண்டேன்.





ஆலயத்தில் ஒரே கடவுளை விசுவசிக்கின்றேன் என்று அறிக்கை செய்துவிட்டு அனுதின வாழ்வில் ராகுகாலம், நாள் நட்சத்திரம், நவக்கிரகம் எமகண்டத்தை விசுவசிக்கின்றேன் என்ற முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய கால சூழ்நிலையில் ஐந்தாவது நற்செய்தி ஒன்று தேவைப்படுகிறது. அந்த ஐந்தாவது நற்செய்திதான் நமது சாட்சிய வாழ்வு. நமது விசுவாசம் சொல்லில் இல்லாமல் செயல்வடிவம் பெற இறைவனது துணை வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் மலாக்கி இறைவாக்கினர் வழியாக இறைவன் நெறி தவறி நடந்த தம் மக்களை நன்னெறியில் வாழ வழிகாட்ட அழைப்பு விடுக்கின்றார். இறைவனின் வழிகளைப் பின்பற்றி நடக்காமல் தான்தோன்றித்தனமாக நடந்தால் இறைவனது தண்டனைக்கு உள்ளாக்கப்படுவோம் எனவும் மாறாக பெற்ற அழைப்பிற்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்தால் இறையாசீர் நிறைவாய்ப் பெறுவோம் என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தெசலோனிக்க மக்கள் துன்பங்களுக்கும் வேதகலாபனைகளுக்கும் மத்தியிலும் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதை பவுல் மனப்பூர்வமாக பாராட்டுகிறார். இறைவார்த்தையின் மீது அவர்களுக்கு இருந்த தாகத்தையும் அவர்கள் பிறமக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்க்கை வாழ்வதையம் எடுத்துக்கூறி தொடர்ந்து சாட்சி பகிர அவர்களை உற்சாகமூட்டுகிறார். நாமும் அவர்களைப் போல கிறிஸ்துவுக்கும் அவரது போதனைகளுக்கும் சாட்சிகளாக வாழ அருள் வேண்டுவோம். நமது விசுவாசம் செயல்பாடுமிக்க விசுவாசமாக இருக்கட்டும்.

**மன்றாட்டுக்கள்**

1)அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் உமது போதனைகளால் உறுதியூட்டப்பட்டு எண்ணத்திலும், சொல்லிலும் மற்றும் செயலிலும் உமக்கு சாட்சி பகிர அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2)அன்பின் இறைவா எம் அரசியல் சமூக ஆன்மீக தலைவர்கள் தங்களது வார்த்தை ஜாலத்தால் மக்களை ஏமாற்றாமல் தாங்கள் அறிவிக்கின்ற வாக்குறுதியை செயல்படுத்தி மக்கள் நலனிலும் அக்கறை கொண்டவர்களாக வாழ அவர்களுக்கு அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3)அன்பின் இறைவா திருமுழுக்கு பெற்றுள்ள உமது விசுவாசிகளாகிய நாங்கள் ஒவ்வொருவரும் மூடநம்பிக்கைகளை விடுத்து உம்மை மட்டுமே விசுவசித்து, அவ்விசுவாசத்தை வாழ்வாக்கிட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4)அன்பின் இறைவா எவ்வாறு முதல் கிறிஸ்துவ சமூகம் தங்களது விசுவாச சாட்சிய வாழ்வால் பலரை இயேசுவிடம் அழைத்து வரச் செய்ததுபோல எங்களது வாழ்வால் இயேசுவை அறியாதவர்கள் இயேசுவை அறிந்து கொள்ளவும் கிறிஸ்துவ மறைக்கு எதிராக செயல்படுபவர்கள் கிறிஸ்தவ மறையை ஏற்றுக் கொள்ளவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

குரல் கொடுக்கிறார். சமூகத்தில் முகவரி இழந்த இவர்களை கனிவுடன் நடத்துமாறு இறைவன் நமக்கு விடுக்கும் அழைப்புக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இறைவன் அடிமைகள், உரிமைகள் மறுக்கப்பட்டோர், மனித மாண்பு சிதைக்கப்பட்டோர் பக்கம் இருக்கிறார். இத்தகைய பரிவிரக்க பண்பாட்டையே புனித பவுல் அடிகளார் இரண்டாவது வாசகத்தில் வலியுறுத்துகிறார். பவுல் தான் நற்செய்தி அறிவிக்க வந்தபோது தெசலோனிக்கர்கள் அவரை வரவேற்று உபசரித்துக் கனிவுடன் நடத்தினர் என்பதை நினைவு கூர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நாமும் அவரைப் போலவே பிறரை ஏற்று, அன்பு செய்து, இறையன்பிலும், பிறரன்பிலும் வளர அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1)அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் கிறிஸ்துவின் அன்புக் கட்டளைளை ஏற்று அதை வாழ்வாக்கி அதன் வழியாக இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2)அன்பின் இறைவா எங்களது அனுதின வாழிவில் ஏழைகள், வறியோர், கைவிடப்பட்டோர், அகதிகள் இவர்களை ஏற்றுக் கொண்டு எங்களால் முடிந்த உதவிகளை அவர்களுக்கு செய்யக் கூடிய தாராள உள்ளத்தை எங்களுக்கு அருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3)அன்பின் இறைவா எங்களது விசுவாச வாழ்வில் உம்மை முழுமனதுடனும் பிளவுபடாத உள்ளத்துடனும் அன்பு செய்து உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து உமது இரக்கத்தையும் உமது அன்பையும் நிறைவாகப் பெற அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4)அன்பின் இறைவா எங்களது விசுவாச வாழ்வை போதனைகளோடு நிறுத்திக் கொள்ளாமல் வாசிப்பதை விசுவசிக்கவும், விசுவசிப்பதைப் போதிக்கவும், போதிப்பதை வாழ்வாக்கவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 31 ஆம் ஞாயிறு (05.11.2023)

மலா 1:14,2:2, 8-10 1தெச 2: 7-9 மத் 23:1-12

**முன்னுரை**

இறையேசுவில் அன்புக்குரிய இறைமக்களே முடிந்தவன் சாதிக்கிறான். முடியாதவன் போதிக்கிறான் என்று நக்கலாகச் சொல்லப்படுகிறது. இன்றைய உலகிற்குத் தேவை போதனையாளர்களை விட சாதனையாளர்களே. அதாவது சொன்னதை செய்து காட்டுபவர்கள். இன்று நற்செய்தி பரவாமல் நாத்திகம் பரவுகிறது. அதற்கு ஒருவேளை கிறிஸ்தவர்களாகிய நாமும் காரணம் என்று ஒளிவு மறைவு இன்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. கடவுள் மறுப்புக் கொள்கை தோன்றுவதற்கு நம்பிக்கை கொண்டோரும் பெரும் பொறுப்பாளிகளாக முடியும். ஏனெனில் நம் சமய அறநெறி சமூக வாழ்க்கை முறையில் குறைபாடுகளைக் கொண்டிருப்பதால் சமயம் மற்றும் கடவுளுடைய உண்மையான உருவை மறைத்துவிடுகிறோமின்றி அதை வெளிக்காட்டுவதில்லை என்கின்றது இன்றைய உலகில் திருஅவை எண் 19.





7)ஏசா கானான் நாட்டுப் பெண்களில் இத்தியன் ஏலொனின் ……… ஆதாவையும் இவ்வியன் சிபெயோனின் மகளான அனாவின் மகள் ஒகோலி பாமாவையும்,
9)யோசேப்பின் தலைவன், அரசக் கைதிகள் காவலில் வைக்கப்பட்டிருந்த அதே சிறைச்சாலைக்கு அவரை இழுத்துச் சென்று ……….. வைத்தான்.
12)உடனே அவர் கூக்குரலிட்டு ………. எகிப்தியர் அதைக் கேட்டனர். பார்வோன் வீட்டாரும் அதைப்பற்றிக் கேள்விப்பட்டனர்.

**மேலிருந்து கீழ்**

1)அவனும் அவற்றைத் தன் தந்தையிடம் எடுத்துச்சென்று,' அப்பா' என்று ……… அவரும் மறுமொழியாக, ஆம் மகனே, நீ எந்த மகன்?' என்று கேட்க,
2)இப்படியிருக்க லேயா வெறுப்புக்குள்ளானதை ……….. கண்டு அவருக்குத் தாய்மைப்பேறு அருளினார். ராகேலோ மலடியாகவே இருந்தார்.
5)அவர் வயது முதிர்ந்தவராய் இறந்து, தம் மூதாதையருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் புதல்வர்கள் ஏசாவும் யாக்கோபும் அவரை ……… செய்தனர்.
8)அங்கிருந்த ஆள்களை நோக்கி, 'ஏனயிம் அருகே ……… இருந்த விலைமாது எங்கே?' என்று கேட்க, அவர்கள், 'இங்கே விலைமாது எவளுமில்லை என்றனர்.
11)பின்பு, அவர்களில் ஒருவன் சாவடியில் தன் கழுதைக்குத் தீனி போடுவதற்காகத் தன் கோணியைத் திறக்கவே, அதன் வாயில் தன் …….. இருக்கக் கண்டான்.
13)எகிப்து நாட்டில் யோசேப்பிற்குப் பிறந்த புதல்வர்களோ ……… ஆகவே எகிப்தில் குடிபுகுந்த யாக்கோபின் குடும்பத்தார் எல்லோரும் எழுபதுபேர் ஆவர்.

**கீழிருந்து மேல்**

3)இவ்வாறு யாக்கோபு பெரும் ……….. மந்தைகள், வேலைக்காரர், வேலைக்காரிகள், ஒட்டகங்கள், கழுதைகள் ஆகியவற்றை அவர் பெருமளவில் கொண்டிருந்தார்.
4)சகோதரர் ஏசாவுக்கு நான் மிகவும் ……… அவர் கையினின்று என்னை விடுவித்தருளும்.
6)அப்பொழுது அவர் சகோதரர் அவரை நோக்கி, 'நீ எங்கள் மீது உண்மையிலேயே ஆட்சி செலுத்தப்போகிறாயோ? நீ எங்கள் மீது உண்மையிலேயே அதிகாரம் செலுத்தப் போகிறாயோ? என்று கேட்டனர். இவ்விதக் கனவுகளின் காரணமாகவும் அவருடைய தகவல்களின் காரணமாகவும் அவரை அவர்கள் ……… அதிகமாய் வெறுத்தனர்.
7)அதன் பொருட்டும் அவர் சகோதரர் அவர் மீது பொறாமை கொண்டனர். அவர் தந்தையோ இக்காரியத்தைத் தம் ……… கொண்டார்.
9)காலையில் யோசேப்பு ……… வந்தபோது அவர்கள் கவலையாய் இருக்கக் கண்டார்.
10)அச்சமயம் ஒரே இரவில் வெவ்வேறு பொருள் கொண்டி கனவுகளை நானும் …….. கண்டோம்.
12)மேலும் அவருக்கு முன் அவர்களில் மூத்தவன் தலைமகன் உரிமைப்படி முதலாவதாகவும், இளையவர்கள் …….. வயதின்படியும் அமர்த்தப்பட்டதால் ஒருவர் மற்றவரை வியப்புடன் நோக்கினர்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-10-2023**

# செபமாலை கயிறு ⑥



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

கயிறு இருந்தால் போதும்
எனக்கு எந்த பயமில்லை – உண்மையிலே
எனக்கு எந்த பயமில்லை
கயிறு இல்லாமல் போனால்
எனக்கு எந்த பலனில்லை – உண்மையிலே
எனக்கு எந்த பலனில்லை
உயிரின் மீதும் பயமில்லை - இந்த
உலகின் மீதும் பயமில்லை
எதிரி மீதும் பயமில்லை – நான்
தனி என்றாலும் பயமில்லை – உண்மையிலே
எனக்கு ஒன்றும் பயமில்லை
சாவு கண்டும் பயமில்லை
சாத்தான் கண்டும் பயமில்லை
சிறுமை கண்டும் பயமில்லை – பெரும்
சுமைகள் கண்டும் பயமில்லை – உண்மையிலே
எனக்கு ஒன்றும் பயமில்லை
உற வில்லையா பயமில்லை
நட் பில்லையா பயமில்லை
பொருள் இல்லையா பயமில்லை
புகழ் இல்லையா பயமில்லை – உண்மையிலே
எனக்கு ஒன்றும் பயமில்லை
பாதா ளமோ எனக்கில்லை
அகா லமோ எனக்கில்லை
அக்கினி நெருப்பு எனக்கில்லை
அழு குரலும் எனக்கில்லை – உண்மையிலே
இவை எதுவும் எனக்கில்லை
அழியா ஆன்மா எனக்கில்லை
பழி பாவமும் எனக்கில்லை
அங்க லாய்ப்பும் எனக்கில்லை
அதி பயங்கரம் எனக்கில்லை – உண்மையிலே
இவை எதுவும் எனக்கில்லை
இயேசு விடமே உறுதி
சேரு வதுமே உறுதி
நிம் மதியும் உறுதி - இறை
சந் நிதியும் உறுதி – உண்மையிலே
இவை யாவுமே உறுதி





2)அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல சமயப் பற்றுள்ள கிறிஸ்தவர்களாகவும் நல்ல நாட்டுப்பற்றுள்ள இந்தியர்களாகவும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3)அன்பின் இறைவா எங்கள் நாட்டுத் தலைவர்கள் எல்லா சமயத்தினரையும் சமமாக நடத்திடவும், கிறிஸ்தவ உரிமைகளை பாதுகாத்திடவும், சிறுபான்மையினர் அச்சமின்றி வாழ்வதை உறுதி செய்திடவும், செயல்படுத்திடவும் தேவையான இறை ஞானத்தையும் இறையருளையும் பொழிந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4)அன்பின் இறைவா உமது அன்பின் உறவில் நிலைத்து வாழவும் அவ்விறையன்பை பிறரோடு பகிர்ந்து வாழவும் தேவையான இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 30 ஆம் ஞாயிறு (29.10.2023)

விப 22:20-27 1தெச 1:5-10 மத் 22: 34-40

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்தவர்களே, வறுமையும், பசியும்தான் பல சமூக தீமைகளின் பிறப்பிடம். அதன் அடிப்படைக் காரணம் ஆதிக்கவாத மனிதர்களின் சுயநலமும் பேராசையுமே. இல்லாக்குறை என்பதைவிட பகிராக்குறையே காணப்படுகிறது. நேர்மறை எண்ணம் எப்போது தழைக்கிறதோ, சமூக வளர்ச்சியில் அக்கறை உதிக்கிறதோ அப்பொழுதுதான் மனிதத்தன்மை நம்மில் வெளிப்படும். இதை செயல்படுத்திட அன்புக் கட்டளை நமது வாழ்வாக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் மையமும் திருவிவிலியத்தின் சுருக்கமும் கடவுளை அன்பு செய், உனக்கு அடுத்திருப்பவரை அன்பு செய். இறையன்பு என்பது இறைவனை முழு மனதுடனும் பிளவுபடாத உள்ளத்துடனும் அன்பு செய்வது. பிறரன்பு இறையன்பின் வெளி அடையாளம். சின்னஞ்சிறிய எம் சகோதரர்களுக்கு இவற்றை செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்கிறார் இயேசு. பிறரை அன்பு செய்தல் என்பது பிற மனிதரின் சமயம், தகுதி, கல்வி, மொழி, இனம், நிறம், சாதி, பாலினம் போன்ற மிகச்சாதாரண அடிப்படைகளைத்தாண்டி ஏற்றுக்கொள்ளுதலும், மதித்தலும் ஆகும். இதுதான் கிறிஸ்துவின் வாழ்வும் அவரது போதனைகளும் நமக்கு தருகின்ற வாழ்வியல். எனவே இவ்வன்பு கட்டளையை வாழ்வாக்குவதே நமது கிறிஸ்துவ வாழ்வின் முழுமை. கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்ந்திட இறையன்பையும் பிறரன்பையும் வாழ்வாக்குவோம். இதன் வழியாக இறைவனது மகிழ்ச்சியிலும் மாட்சிமையிலும் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தின் பகுதி உடன்படிக்கையின் புத்தகம் என அழைக்கப்படுகிறது. இவ்வாசகத்தில் இறைவன் தன்னை வலிமையற்றவர்களுடனும், அனாதைகள், அகதிகள் மற்றும் கைம்பெண்களுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதைக் காணலாம். காரணம் இவர்கள் சமூக பொருளாதார அடிப்படையில் கடைநிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். அவர்கள் சார்பாக இறைவன்

## பொதுக்காலம் 29 ஆம் ஞாயிறு (22.10.2023)

எசா 45:1.4-6 1 தெச 1: 1-5 மத் 22: 15-21

**முன்னுரை**

இன்றைய வாசகங்கள் பண ஆசை, கடவுள் ஆசையைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. பண ஆசையும், கடவுள் ஆசையும் அல்ல, மாறாக பணத்தின் மீது ஆசையா அல்லது கடவுள் மீது ஆசையா என்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம். பணத்தின் மீது உள்ள ஆசையால் அன்று உரோமைப் பேரரசன் அடிமைகளாக இருந்த யூத மக்களை நிலவரி, சொத்து வரி, கப்பம் எனும் மூன்று வரிகளைச் செலுத்தக் கட்டாயப்படுத்தினான். இன்றும் நாம் கூட பல வகையான வரிகளை அரசாங்கத்திற்குச் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

அரசும் சமயமும் மோதத் தேவையில்லை. இரண்டுமே மக்களின் நலனை மையப்படுத்தி இயங்குகின்றன. அரசு மக்களின் பொருளாதாரத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. சமயமோ மக்களின் ஆன்மீகத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. அதே நேரத்தில் அரசைவிட மனிதன் அதிகம் கடமைப்பட்டுள்ளது கடவுளுக்கு. எனவேதான் இயேசு பணத்தின் மீது உள்ள ஆசையை விட்டுவிட்டு கடவுளை நாடிச் செல், கடவுளுக்குச் செலுத்த வேண்டிய மதிப்புகளையும் கடமைகளையும் மறக்காமல் நிறைவேற்ற வேண்டும் என்கிறார். எனவே கிறிஸ்துவைப் போல் ஞானமும் விவேகமும் உள்ளவர்களாக வாழக் கற்றுக் கொள்வோம். நல்ல சமயப் பற்றும் நல்ல நாட்டுப் பற்றும் இணைந்து செல்ல வேண்டும். அதற்கான இறையருளைப் பெற்று வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

தன்னைத் துன்புறுத்திய பவுலையும் தனக்குப் பணி செய்ய அழைத்த இறைவன் பாவிகள் என்று கருதப்பட்ட புறவினத்தாரின் அரசனை உதவியாளராகத் தேர்ந்தெடுக்கிறார். அவரும் யூதர்களுக்கு ஓர் ஆலயம் கட்டித்தருகிறார். நமது நாடு சமய சார்பற்ற நாடு. எனவே எல்லா சமயத்தினரையும் அது சமமாக நடத்த வேண்டும். எனவே நமது நாட்டுத் தலைவர்களுக்கு மக்களை நல்வழியில் நடத்தக்கூடிய இறைஞானம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவ விசுவாச வாழ்வு தந்தையாம் கடவுளோடும், ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கின்ற வாழ்வு என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் நமக்கு உணர்த்துகின்றது. கடவுளால் சிறப்பாக அன்பு செய்யப்படுகின்றார்கள் கிறிஸ்தவர்கள் என்பதை அவர் நம்மைப் பல மக்களிடமிருந்து தேர்ந்தெடுத்ததிலிருந்து புலனாகிறது. அத்தகைய இறையன்பை நாமும் வாழ்வாக்கிட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1)அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் போதனைகளை வாழ்வாக்கி கிறிஸ்துவ அழைப்பின் முழுமையை அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

## பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு (08.10.2023)

எசா 5: 1-7 பிலி 4:8-9 மத் 21: 33-43

**முன்னுரை**

இறையேசுவில் அன்பான இறைமக்களே, இன்றைய இறைவார்த்தை வழிபாடு, நம் வாழவை, நாம் கொண்டிருக்கின்ற வாழ்க்கை மதிப்பீடு சார்ந்த நிலைப்பாடுகளை சற்று ஆழமாகச் சிந்திக்க அழைக்கின்றது. இறைத்தன்மையும், மனிதத் தன்மையும் கலந்த நமது வாழ்வில் நம்மை ஆட்கொள்வது இறைமையா? அல்லது மனிதமா? அடிப்படையில் இறைமை கலந்த மனிதமும், மனிதம் கலந்த இறைமையும் இன்று அலட்சியமாக்கப்படுகிறது. இவை ஒன்றையொன்று பிரித்துக் கொண்டோ உயர்த்திக் கொண்டோ செல்லும்போது வாழ்வு துயரத்தில் முடிகின்றது.

பல வேளையில் நாம் நினைப்பதொன்று கடவுளின் திட்டம் ஒன்றாக அமைகின்றது. கடவுள் கொடுக்க நினைப்பதை மனிதன் தடுக்க முடியாது. கடவுள் தடுக்க நினைப்பதை மனிதன் கொடுக்க முடியாது. உண்மையான ஆன்மீகம் என்பது மனித நிறை குறைகளைப் புரிந்து ஏற்று, திருந்தி, மாற்றி வாழ்வதும், வாழ்விப்பதாகும். எனவே இன்றைய இறைவார்த்தை வழிபாடு, உண்மையான, கண்ணியமான, தூய்மையான, நேர்மையான, விரும்பத்தக்க, பாராட்டுதற்குரிய, போற்றுதற்குரிய இறைமனிதம் கலந்த மதிப்பீடுகளோடு கொண்ட கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைக்கின்றது. நாம் காட்டுக் கனிகளைக் கொடுக்காமல் நற்பண்புகள் எனப்படும் நற்கனிகளைக் கொடுப்போம். கடவுளை மகிமைப்படுத்துவோம். உலகம் அழியாமல் பாதுகாப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் நமது அன்றாட வாழ்வை பிரதிபலிக்கின்றது. ஒரு பொருளை அல்லது பதவியை ஒரு மனிதரிடம் இருந்து பெறுகின்றபோது இருக்கின்ற மரியாதை, மதிப்பு, நம்பிக்கை காலப்போக்கில் காணப்படுவதில்லை. திராட்சைத் தோட்டம் அமைத்தவர் அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருந்தாலும் அது பயன் தரவில்லை என்று மனம் சோர்ந்து தோட்டத்தை அழிக்கமுயல்கின்றார். இன்றைக்கு நாமும்கூட இறைவனின் எல்லையில்லா அன்புச் சுனையிருந்து கணக்கற்ற அருள்வரம் பெற்றிருந்தாலும் அவ்விறைவனின் இரக்கச் செயலை மறந்து வாழும் நமது வாழ்வை பிரதிபலிக்கும் இவ்விறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகம் இறைமனிதம் சார்ந்த பண்புகளை வலியுறுத்துவதாக இருக்கின்றது. எந்த சூழ்நிலையிலும் பிற நற்பண்புகளைக் கடைப்பிடிக்கத் தவறாது வாழ நமக்கு இன்று அழைப்பு விடுக்கின்றது. இறைவனின் திருமுன்னிலையில் உண்மையும் உறுதியும் கொண்டு சமூகத்தில் வலம் வந்த இயேசுவைப் போல் நாமும் வாழ பவுல் அடிகளார் நம்மை தயாரிக்கின்றார். எதெல்லாம் நற்பண்புடையதோ எதெல்லாம் புகழ்ச்சிக்குரியதோ அதை தொடர்ந்திட இறையருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1)அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் இறைமனித மதிப்பீடுகளை வாழ்வாக்கி, நற்கனிகளைக் கொடுக்கும் திராட்சை கொடிகளாக வளர்த்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2)அன்பின் இறைவா, நாங்கள் எங்களது அனுதின கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உமது பேரன்பையும் உமது இரக்கத்தையும் மறவாமல் உமக்கும் உமது வார்த்தைக்கும் உண்மையுள்ள சீடர்களாக வாழ்ந்திட அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3)அன்பின் இறைவா, நாங்கள் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு மனமாறி உமது இரக்கத்தினால் புதிய வாழ்வு பெற்று புதுப்படைப்புக்களாக வாழ அருள்புரியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4)அன்பின் இறைவா உமது திருவருட்சாதனங்கள் உமது இறையருளை வாரி வழங்கும் கருவிகள் என்பதை உணர்ந்து அடிக்கடி அத்திருவருட்சாதனங்களில் முழுமையாக பங்குபெற்று உமது அருளை எந்நாளும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 28 ஆம் ஞாயிறு (15.10.2023)

எசா 25:8-10 பிலி 4:12-14, 19-20 மத் 22: 1-14

**முன்னுரை**

இறையேசுவில் அன்புக்குரிய இறைமக்களே, இன்றைய இறைவார்த்தை வழிபாடு இறைவன் நமக்கு அளிக்கும் விருந்தினைப் பற்றி கூறுகிறது. இன்றைய முதல் வாசகம் ஆண்டவர் சீயோன் மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார் என்றும் இன்றைய பதிலுரைப் பாடல் இறைவன் நம் எதிரிகள் காண நமக்கு விருந்தைத் தயாரித்துள்ளார் என்றும் கூறுகிறது. இன்றைய நற்செய்தியில் கிறிஸ்து விண்ணரசை திருமண விருந்திற்கும் நம்மை மணமகனுக்கும் ஒப்பிடுகிறார். அவர் நமக்குத் தரும் விருந்தை மீட்பின் விருந்தாக தருகின்றார். அம்மீட்பின் விருந்தில் பங்குபெற நம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கின்றார்.

அம்மீட்பின் விருந்தை கொண்டாடி அவ்விருந்தில் பங்குபெற ஒவ்வொரு ஞாயிறும் திருஅவை நம்மை அழைக்கின்றது. அவ்விருந்தின் அழைப்பை ஏற்று தகுதியோடு பங்குபெறுகின்றோமா அல்லது பல காரணங்களைச் சொல்லி அவ்விருந்தில் பங்குபெற ஆர்வம் காட்டுவதில்லையா என்பதை குறித்து தியானிக்க இன்றைய இறைவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இம்மீட்பின் விருந்தில் நாமும் பங்குபெற இறை உறவிலும் சகோதர உறவிலும் வளர்ந்து இறையருளையும் இறை அன்பையும் நிறைவாக பெற்ற மீட்பின் மக்களாக வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஆண்டவரின் வருகையானது மாபெரும் விருந்துக்கு இணையாகும் என்ற உருவகத்தில் இறைவாக்கினர் எசாயா பேசுகின்றார். ஆண்டவரின் விருந்து அருள் பொழிவினில் எழும் விருந்து ஆசிர்வாதமும் மகிழ்ச்சியும் நிரம்பக் கிடைக்கும் விருந்து. அது எருசலேமில் நிகழும். அதுவும் ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரிய விருந்து. அத்தகைய மீட்பின் விருந்துக்கு நம்மையும் இறைவன் அழைத்திருக்கிறார் என்று மகிழ்வுடன் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இம்மை வாழ்வுக்கு உணவு தேவை ஆனால் உணவுக்கு நாம் அடிமைகள் அல்ல. இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் வயிறார உண்ணவோ பட்டினி கிடக்கவோ நான் பயிற்சி பெற்றிருக்கிறேன் என்று கூறுகிறார். மண்ணக உணவைவிட விண்ணக உணவு நமக்குத் தேவை. கிறிஸ்துவின் மீட்பின் விருந்தில் முழுமையாக பங்கு பெற்று இறைஉறவில் வளர்ந்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்பொம்.

**மன்றாட்டுக்கள்**

1)அன்பின் இறைவா எம் திருத்தந்தை. ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது மீட்பின் விருந்தில் தகுதியுடன் பங்கு பெற்று உமக்கு சாட்சிகளாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2)அன்பின் இறைவா ஒவ்வொரு நாளும் நற்கருணை கொண்டாட்டத்தில் உண்மையாகவே உமது உயிருள்ள பிரசன்னத்தை எங்களுக்கு வெளிப்படுத்துகின்றீர் என்ற மறை உண்மையை உணர்ந்து திருப்பலியில் முழுமையாக பங்குபெற்று உமது அருளையும் மீட்பையும் பெற எங்களுக்கு துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

3)அன்பின் இறைவா விருந்து உறவுகளின் சங்கமம் என்பதை உணர்ந்து இத்திருப்பலியில் பங்குபெறும் நாங்கள் அனைவரும் ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், சகோதரத்துவத்தோடும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4)அன்பின் இறைவா உமது திருவிருந்தில் பங்குபெற்று உமது அன்பையும் அருளையும் பெற்றுக் கொண்ட நாங்கள் ஒவ்வொருவரும் ஏழைகள், வறியோர், கைவிடப்பட்டோர் அனைவர் மீதும் பரிவும் இரக்கமும் கொண்டு எங்களிடம் இருப்பவற்றை அவர்களோடு பகிர்ந்து வாழ கூடிய தாராள குணத்தை எங்களுக்கு அருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.